மலர் - 26 / இதழ் -10 / அக்டோபர் 2025
Volume -26/ Issue - 10 / October 2025
தமிழ் மாத இதழ் / தனிப்பிரதி ரூ.20/-
Tamil Monthly/ Per Copy Rs.20/-

# வளரும் விண்ணரசு
## VALARUM VINNARASU




"...மனந்திரும்ப வேண்டுமென்று
எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும்
கட்டளையிடுகிறார்".

(அப்போஸ்தலர் நடபடிகள் 17:30)

## பொதுச்சேவகரிடமிருந்து...



கிறிஸ்துவுக்குள் அன்பான வளரும் விண்ணரசு வாசக சகோதர, சகோதரிகளுக்கு, நம் கர்த்தரும் மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

செப்டம்பர் மாதத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

செப்டம்பர் முதல் வாரத்தில் கோண்டி மொழி வேதாகம மொழி பெயர்ப்பாளர்களுக்கான சிறப்புப் பயிற்சி நடைபெற்றது.

இலக்கணம், கலாச்சாரம் மற்றும் பண்பாட்டு முறைகளை மொழி பெயர்ப்பின்போது, எங்ஙனம் கவனிக்க வேண்டும் என்பதைப் பற்றிய பாடங்கள் கற்றுக் கொடுக்கப்பட்டன.

செப்டம்பர் 9ஆம் தேதி முதல் 12ஆம் தேதி வரை வட இந்திய அருட் பணியாளர்களுக்கான சிறப்புப் பயிற்சிகள் கொடுக்கப்பட்டன. வட இந்திய பணித்தள ஒருங் கிணைப்பாளர் திரு. தாங் பாவ் மற்றும் இணைப் பொதுச்செயலர் திரு. டேவிட் சாலமோன் ஆகியோருடன் நானும் இணைந்து அவர்களுக்கு பயிற்சி கொடுத்தோம்.

செப்டம்பர் 14ஆம் தேதி ஆந்திராவிலுள்ள நமது திருச்சபை



ஒடிசாவில் நடைபெற்ற சிறப்புக்கூடுகையில் கலந்து கொண்ட வடஇந்திய அருட்பணியாளர்கள்.



தரிசனம் பரப்புவோர் குடும்பக்கூடுகை கன்னியாகுமரியில் நடைபெற்றது.







தரிசனம் பரப்புவோர் குடும்பக்கூடுகையில் அருள்திரு. சுந்தர்சிங் அவர்கள் பேசியபோது...

தொடர்ச்சி கடைசிப் பக்கம் பார்க்க...

நிறுவனர்
டாக்டர். N.J. ஞானையா

ஆசிரியர் குழு:

அருள்திரு.G. பொன்னுராஜ்
அருள்திரு. இம்மானுவேல் பாண்டி
திரு. இரா. பாலசுப்பிரமணியன்
திரு.V.S. தம்பிராஜ்
திருமதி. ரேணுகா பிரின்ஸ்

இதழின் உள்ளே...

| | |
|---|---|
| அருட்செய்தி! | 04 |
| கனவு காண வா! | 08 |
| செப்டம்பர் மாத வினா-விடைகள் | 10 |
| துதித்து மன்றாடுவோம்! | 11 |
| மறக்கமுடியாத அருட்தொண்டர்கள் | 20 |
| பெண்கள் பகுதி | 28 |
| ஆண்டவர் தொடும்போது... | 29 |
| வேதாகமத்தின் பக்கங்களிலே | 31 |
| வாலிபர் பகுதி | 34 |
| சரியான விடை எழுதியவர்கள் | 36 |
| வேத வினாக்கள் | 37 |
| நடப்புச் செய்திகள் | 38 |

| | ஆண்டு சந்தா | ஆயுள் சந்தா |
|---|---|---|
| இந்தியா : | ₹200/- | ₹1500/- |

**சந்திக்கப்படாத மக்கள் கூட்டங்களை சந்தித்து சீடராக்கும் ஊழியத்திற்கு காணிக்கை அனுப்ப வேண்டிய முகவரி**

**ICGM**

**58/1 முத்தாலம்மன் கோயில் தெரு, சேலையூர், சென்னை- 600 073.**

வளரும் விண்ணரசு குறித்த விபரங்களுக்கு
தொடர்பு கொள்ள அலைபேசி : 94459 24440
ICGM Land Line: (044)2229 1045

contacticgm@gmail.com

# இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷன்

**தரிசனம்:** (Vision Statement)

நமது இந்திய நாட்டின் அனைத்து மாநிலங்களில் வாழும் ஒவ்வொரு மக்கள் கூட்டத்திலும் சாட்சியுள்ள சுயசார்புள்ள திருச்சபைகள்.

**வேத ஆதாரம்:** (வெளி. 7:9)

"இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங் களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலு மிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக் கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக் குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக் கண்டேன்."

**செயல்திட்டம்:** (Mission Statement)

இயேசு கிறிஸ்துவின் சீடர்களாகிய நாம், இந்தியாவில் நற்செய்தி சென்றடையாத, தேவன் வழிநடத்துகிற மக்கள் கூட்டங்களுக்கு, நற்செய்தியைப் பிரசங்கித்து, அவர்களை சீடர்களாக்கி, சாட்சியுள்ள சுயசார்பு திருச்சபைகளை உருவாக்குகின்ற நோக்கத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

**வேத ஆதாரம்:** (மத்தேயு 28:19-20)

"ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்."

வளரும் விண்ணரசு பத்திரிகைக்கு செக், டிராப்ட் ஆன்லைன் மூலம் பணம் அனுப்புபவர்கள் கீழ்க்கண்ட வங்கிக்கணக்குக்கு அனுப்பி 94459 24440 என்ற எண்ணிற்கு குறுஞ்செய்தி அனுப்பவும்.
A/C NAME: IRAI ARASU TRUST, BANK NAME: STATE BANK OF INDIA
A/C NUMBER: 10143136762, IFSC CODE: SBIN0002235

அருட்செய்தி

# "மனந்திரும்புங்கள்" என்பது ஒரு கட்டளை

Rev.A. லெஸ்லி நாகராஜன்

நாம் பெலவீனமானவர்கள் என்பது வேதம் கூறும் உண்மை. அநேக நேரங்களில், நாம் பெலனற்றவர்கள் என ஏற்றுக் கொள்வதற்கு நமக்கு மனதில்லை. நமது அறிவு, அதிகாரம், செல்வம், செல்வாக்கு, பராக்கிரமம் ஆகியவை நாம் பெலவீனர்கள் என்பதை ஒப்புக்கொள்ள மறுக்க வைக்கின்றன.

"அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருந்தபோதே குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்" (ரோமர் 5:6) எனக் கூறும் மேற்கண்ட வசனத்தை இந்த செய்தியில் சற்று விரிவாக நாம் சிந்திப்போம்.

**நம்மை பெலவீனராகவே காணும் இயேசு கிறிஸ்து:**

"அவர் திரளான ஜனங்களைக் கண்ட போது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போல தொய்ந்துபோனவர்களும், சிதறப் பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள் மேல் மனதுருகி..." (மத்தேயு 9:36) என வாசிக்கிறோம். வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! (மத்தேயு 11:28) என அறைகூவல் விடுப்பதையும் பார்க்கிறோம்.

"அக்கிரமங்களினாலும், பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார் (எபேசியர் 2:1) எனவும் வாசிக்கிறோம். நம்மைக்குறித்த கடவுளுடைய பார்வை இவை. ஆனால், நடைமுறை வாழ்க்கையில், நம்மைப் பற்றி நாம் என்ன நினைக்கிறோம் என்பது முக்கியமானது.

பெரிய தலைவர்கள், கிறிஸ்தவத் தலைவர்கள், பணக்காரர்கள், அறிவாளிகள், சிறந்த விஞ்ஞானிகள் போன்றவர்களாயிருந்தாலும், நாம் பெலவீனமானவர்கள். நமது மாம்சமும், மனசும் விரும்பினவைகளை செய்து, சுபாவத்தினாலே நாம் கோபாக்கினையின் பிள்ளைகள். கீழ்ப்படியாமையின் பிள்ளைகள். ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவியின்படி நடக்கின்றவர்கள். (எபேசியர் 2:3).

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வாழ்ந்த அக்காலத்திலும், தங்களைப் பெலமுள்ளவர்களாக, தூய்மையானவர்களாகக் காட்டி வாழ்ந்தவர்கள் இருந்தார்கள்.

அதனால் தான், இயேசு கிறிஸ்துவும் "பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல், சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை" என்று அவர்களின் பெலவீனத்தை நேரடியாகவே சுட்டிக் காட்டினார்.

"சனாதனம்" என்ற வார்த்தை தற்காலத்தில் பிரபலமாகி வருகிறது. கிறிஸ்தவர்களிலும் அதை அப்படியே கடைப்பிடிக்கும் "சனாதனவாதிகள்" இருக்கத்தான் செய்கிறார்கள்.

நமது நாட்டில் சாதிக்கொரு ஆலயம் இருப்பது நாமனைவரும் அறிந்ததே. இப்படிப்பட்ட சிந்தனையுள்ளவர்கள் மறைமுகமாக சனாதனத்தை தங்கள் வாழ்க்கையில் கடைப்பிடிக்கும் பெலவீனராயிருக்கிறார்கள்.

தனது பெலவீனத்தை உணராத நேபுகாத்நேச்சார், "இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால், என் மகிமைப் பிரதாபத்துக்கென்று, ராஜ்யத்துக்கு அரமனையாக நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா என்று சொன்னான் (தானியேல் 4:30). அந்த நேரமே, அவனது பெலவீனத்தை உணர்த்த சம்பவங்கள் நடைபெற்றன.

பாவிகளில் பிரதான பாவி நான் (1தீமோத்தேயு 1:15) என பரிசுத்த பவுலும்

கூறுகிறார். பெலவீனங்களையும், பாவங்களையும் ஏற்றுக் கொள்ளாதவர்களைப் பார்த்து இயேசு கிறிஸ்து: 'மாயக்காரனே! முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு; பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகைபார்ப்பாய்' என்றார் (மத்தேயு 7:5).

தனது பெலவீனங்களைக் குறித்து பெருமை பாராட்டுகிறவர்களும் இருக்கிறார்கள். பெலவீனங்களை மறைக்கிறவர்களும் இருக்கிறார்கள். ஆனால், தனது பெலவீனங்களுக்காக, பாவங்களுக்காக துக்கப்பட்டு, அதைவிட்டுவிட மனதாயிருக்கிறவர்கள் தேவகிருபையைப் பெற்றுக் கொள்ளுகிறார்கள்.

**குறித்தக் காலத்தில் வந்த இயேசு கிறிஸ்து:**

'காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று..'' என்று உபதேசித்து, ஊழியத்தைத் தொடங்கினார், ஆண்டவர் இயேசு. ''காலம் நிறைவேறினபோது...'' என, இயேசுவின் முதலாம் வருகையைப் பற்றிய குறிப்புகளை வேதத்தில் (ரோமர் 5:6, கலாத்தியர் 4:5) வாசிக்கிறோம்.

கி.பி. முதலாம் நூற்றாண்டில், ரோமப் பேரரசு உலகின் பெரும்பாலான தேசங்களைத் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தது. அதன் விளைவாக சிறந்த சாலைகள், கொள்ளையர்களிடமிருந்து வழிப் போக்கர்களுக்குப் பாதுகாப்பு மற்றும் சிறந்த பயண வசதிகள் ஆகியவை கிடைத்தன. அதுமட்டுமல்ல, கிரேக்க மொழி பொதுவான மொழியாக இருந்தது.

சிதறடிக்கப்பட்ட யூதர்களால், ஒரே தெய்வம் என்ற கடவுள் நம்பிக்கையும், ''மேசியா வருவார்'' என்ற நம்பிக்கையும் ஒரளவு பரவியிருந்தது. இது போன்ற கலாச்சார, மொழி மற்றும் அரசியல் சூழ்நிலைகள், அந்த கால கட்டத்தில் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்கச் சாதகமாயிருந்தன.

**மனந்திரும்பக் கட்டளையிடும் இயேசு கிறிஸ்து:**

இந்நாட்களில், இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தி பல்வேறு விதங்களில் அறிவிக்கப்படுகிறது. இயேசு கிறிஸ்து நோய்களை சுகமாக்குகின்றவராக, ஆறுதல் செய்கிறவராக, உற்சாகப்படுத்துபவராக, இரக்கம் உள்ளவராக, அரவணைக்கும் பெற்றோராக உருவகப்படுத்தப்பட்டு அறிவிக்கப்படுகிறார்.

ஆனால், இயேசு கிறிஸ்து தனது முதல் பிரசங்கத்தில், 'மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது' என்று சொன்னார். இதன் பொருள்- 'பாவஞ்செய்வதை விட்டுவிடுங்கள்' என்பதாகும். ''மனந்திரும்புதல்'' என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் 47 முறை பயன் படுத்தப்பட்டிருக்கிறது.

பாவ வாழ்விலிருந்து மனந்திரும்பி, ''இயேசு கிறிஸ்து எனக்காக தம் இரத்தத்தை சிந்தியதால், எனக்கு பாவமன்னிப்பாகிய மீட்பு கிடைத்திருக்கிறது'' என்ற புரிதலைப் பெறவேண்டும். இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள, மனந்திரும்புதல் அவசியம். பிசாசுகள் மட்டுமே மனந்திரும்புதலின்றி இயேசுவை ஏற்றுக்கொள்ள முடியும். (யாக்கோபு 2:19).

''நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி, நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும், நீதியும் உள்ளவராக இருக்கிறார்'' (1 யோவான் 1:9). தம் பாவத்தை அறிக்கை செய்து, அதை விட்டுவிட்டவர்கள், ஆண்டவர் அவர்களது வாழ்க்கையை ஆளுகை செய்ய தம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும் . அவர் சித்தம் செய்ய வேண்டும்.

நமது சித்தத்தை விட்டு விட்டு, ஆண்டவருடைய சித்தத்தை செய்ய நம்மை நாமே ஒப்புக்கொடுத்து வாழ்வது தான் கிறிஸ்தவ வாழ்க்கை அல்லது சீஷத்துவ வாழ்க்கை. இந்த வாழ்க்கை வாழ்பவரே தேவனுடைய

விண்ணரசுக்கு உரியவர்கள். இவர்களே அதற்குள் பிரவேசிப்பார்கள் (மத்தேயு 7:21).

இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும்போது, சுகம் கிடைக்கும், பொருளாதாரம் உயரும், வேதனை நீங்கி சுகமாயிருக்கலாம் ஆகியன போன்ற செழிப்பின் நற்செய்தி அல்லது மக்கள் விரும்பும் கவர்ச்சியான நற்செய்தி பிரசங்கிக்கப்படுகிறது. அது, இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி அல்ல.

யார் ஒருவர் மனந்திரும்பி, (பாவம் செய்வதை விட்டு விட்டு ) தன் பாவத்திற்கான விலைக்கிரையமாக இயேசு தன் ஜீவனைக் கொடுத்து, பின் உயிர்த்தெழுந்தார் என்பதை விசுவாசித்து அறிக்கையிடுகிறாரோ, அவரை இயேசு மன்னிக்கிறார். அதன் பின்பாக, அவர் அவரைப் பின்பற்ற வேண்டும். இயேசுவைப் பின்பற்றி வாழ்வதே கிறிஸ்தவ வாழ்க்கை.

இயேசு கிறிஸ்துவைப் புகழ்வதும், வாழ்த்துவதும், பாடுவதும், பரவசமாவதும் நமது விருப்பத்திற்குரிய செய்கைகள். இயேசு கிறிஸ்துவின் விண்ணரசு என்பது, ஆட்டம், கொண்டாட்டம், ஆர்ப்பாட்டம் நிறைந்ததல்ல; அது நீதியும், பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷம்.

**பரிசுத்த பவுலும்-சீடர்களும்**

“சீஷருடைய மனதைத் திடப்படுத்தி, விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படி அவர்களுக்கு புத்தி சொல்லி, நாம் அநேக உபத்திரவங்களின் வழியாக தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும் என்று சொன்னார்கள்” (அப்போஸ்தலர் 14:22). உபத்திரவங்களினாலே சீஷர்கள் இயேசுவைப் போல உருவாக்கப்படுகிறார்கள்.

மனந்திரும்புதல் ஒவ்வொரு மனிதருக்கும் கொடுக்கப்பட்ட கட்டளையாகும். இதனையே அப்போஸ்தலர் 17:30ஆம் வசனம் கூறுகிறது. “அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார். இப்பொழுதோ, மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்”.

இந்தக் கட்டளை, ஒரு எச்சரிப்பின் கட்டளை ஆகும். இந்தக் கட்டளையின் பொருள், பாவத்தை அறிக்கை செய்து, அதை விட்டுவிட்டு, தன் வாழ்வை ஆண்டவருடைய ஆளுகைக்கு ஒப்புக் கொடுக்க வேண்டும் என்பதாகும்.

“மேலும், ஒருநாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதாலே அதன் நிச்சயத்தை எல்லோருக்கும் விளங்கப் பண்ணினார்...” என்று அப்போஸ்தலர் 17:31இல் வாசிக்கிறோம்.

பூலோகத்தை நியாயந்தீர்க்க கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மீண்டும் ஒருநாளில் வருவார். ஆயத்தமாயிருப்பவர்கள், அவர் வரும்போது அவரை மகிழ்ச்சியோடு எதிர்கொண்டு போவார்கள்.

இதனை எதிர்பாராமல், மாம்சமும், மனதும் விரும்பினவைகளைச் செய்து வாழும் மக்கள் புத்தியில்லாக் கன்னிகைகளைப் போன்றவர்கள். “உங்களை அறியேன்” என்பதை அந்நாளில் இயேசு அவர்களிடம் கூறுவதைக் கேட்க வேண்டியிருக்கும்! (மத்தேயு 25:12).

“மனந்திரும்புதல்” என்பது ஒரு தொடர் நிகழ்வாகும். வெறும் சத்தம் மட்டும் கொடுத்து, உடனே அணைந்து போகும் பட்டாசு போன்றது அல்ல கிறிஸ்தவ வாழ்க்கை.

அது, பின் விளைவுகளைக் கொண்ட அணு குண்டு வெடிப்பு போன்றது. அணுகுண்டு வெடித்த பின்பும் மிகப்பெரிய விளைவுகளை உருவாக்குவது போல, கிறிஸ்துவை முழு மனதோடு பின்பற்றி, அனுதினமும் மனந்திரும்பும் கிறிஸ்தவனின் வாழ்வு, அவனது தனிப்பட்ட வாழ்விலும், சமுதாயத்திலும் மிகப்பெரிய விளைவுகளைக் கொண்டு வரும். 1976ஆம் ஆண்டு முதல்

இன்று வரை ஒவ்வொரு நாளும் மனந்திரும்பும் வாழ்க்கையைத்தான் நான் வாழ்ந்து வருகிறேன்.

**மனந்திரும்பி மாற்றம் பெறும் வாழ்க்கை**

பணக்கார விவசாயி நன்றாக விளைந்த தனது தானியங்களைப் பாதுகாத்து: "நீ இளைப்பாறி, புசித்துக்குடித்து, மகிழ்ச்சியாயிருந்து, அநேக வருடங்களுக்கு வாழ்வாங்கு வாழ்" என்று தனது ஆத்துமாவைக் குறித்து சொன்னது போல, இன்று அநேக கிறிஸ்தவர்கள் தங்களைப் பற்றி மட்டுமே கரிசனை கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களைப் பார்த்து ஆண்டவர், "மதிகேடனே" என்று கூறுகிறார். (லூக்கா 12:19-20).

நமது முற்பிதா ஆபிரகாமைத் தேவன் அழைத்தபோது, "நான் சர்வ வல்லமையுள்ள தேவன், நீ எனக்கு முன்பாக நடந்து கொண்டு உத்தமனாயிரு" (ஆதி. 17:1) என்று கூறுகிறார். கூடயஅநடநளள என்ற ஆங்கில வார்த்தை தமிழில், "உத்தமனாயிரு" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. "வெளிப்படையான வாழ்க்கை வாழ்தல்" என்பது அதன் பொருள்.

மறைந்து வாழ விரும்புகிறவர்கள், மனந்திரும்பி வாழும் வாழ்வை வாழ விரும்ப மாட்டார்கள். தனிப்பட்ட வாழ்வில், உறவுகளில், மற்றும் ஊழியங்களில், பணத்தில் மனந்திரும்ப நாம் எச்சரிக்கப்படுகிறோம்.

மனிதன், உலகமுழுவதையும் ஆதாயப்படுத்தினாலும், தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தினால், அவனுக்கு இலாபம் என்ன?. ஆத்துமாவுக்கு ஈடாக இந்த உலகத்தையே கூடக் கொடுக்க முடியாது. அது அவ்வளவு விலையேறப் பெற்றது!

இந்த இரண்டு வசனங்களின் ஊடாக வருகிற செய்தியென்பது, இந்த உலகத்தின் மதிப்பீடுகள் தேவனுக்கு முன்பாக ஒன்றுமில்லை; மாறாக, ஒவ்வொரு நாளும் கிறிஸ்துவை அறியும் வாழ்க்கை, கிறிஸ்துவைப் பற்றியே சுழன்று கொண்டிருக்கும் நமது சிந்தனைகள், அவரது ஆத்தும தாகத்தைத் தீர்ப்பதற்காக நாம் எடுக்கும் முயற்சிகள் ஆகியவையே நமது ஆத்துமாவைக் குறித்து நாம் கொண்டிருக்கும் கரிசனையாகும். அதுவே, அவரது இறுதிக் கட்டளையை நிறைவேற்ற நம்மை உந்தித் தள்ளும்.

"...நான் பிதாவானால் என் கனம் எங்கே? நான் எஜமானானால் எனக்கு பயப்படும் பயம் எங்கே?" (மல்கியா 1:6) என்று ஆண்டவர் நம்மைப் பார்த்துத் தான் கேட்கிறார். பதில் எங்கே?

**ஆயத்தப்பட்டு-ஆயத்தப்படுத்தும் வாழ்க்கை:**

அன்பான சகோதர, சகோதரியே! ஆண்டவர் நம்மைக் காணும்விதமாக நம்மைப் புரிந்து கொள்வோமானால், அந்தப் புரிந்து கொள்ளுதல் தாழ்மைக்கும், மனந்திரும்புகிற வாழ்க்கைக்கும் நேராக நம்மை நடத்தும்.

கள்ள உபதேசங்களைக் கேட்டு, அதை உணராமல் களிகூர்ந்து வாழ்வது பரிதாபமான ஒன்று. பயத்தோடும் நடுக்கத்தோடும் நமது இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்படுவோம் (பிலிப்பியர் 2:12). தேவனுடைய இராஜ்யம் புசிப்பும், குடிப்புமல்ல. அது, நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமாயிருக்கிறது.

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வரப்போகிறார். மனந்திரும்பும் வாழ்க்கையே, மகிழ்ச்சியான வாழ்க்கை. கிறிஸ்துவின் வருகைக்கு நாம் ஆயத்தப்படுவோம். மற்றவரை ஆயத்தப்படுத்துவோம்.

**இராஜாதி இராஜன் இயேசு வருவார்**
**சந்திக்க ஆயத்தமா ?**
**வருவேன் என்றவர் சீக்கிரம் வருவார்**
**சந்திக்க ஆயத்தமா ?**
**கேள் ! கேள் ! மானிடரே**
**சந்திக்க ஆயத்தமா ?**

தன்வரலாற்றுத் தொடர்

கனவு காண வா!

11

# யாக்கோபு என்னும் இஸ்ரவேலின் மறைவு!

அறிவு

(பழைய ஏற்பாட்டு யோசேப்பின் வாழ்க்கை வரலாறு)

எங்களுடைய எபிரேயப் பண்பாட்டின்படி, ஒரு மனிதனின் மறைவுக்கு முன்னர், அவருக்கு ஆற்றல் அல்லது வலிமை (பெலம்) இருக்கும்போதே, அவர், தன்னுடைய சந்ததிக்கு எதிர்காலத்தைப் பற்றி அறிவிக்கும் ஒரு வழக்கம் இருந்தது.



யோசேப்பாகிய எனக்கு இருந்த இரண்டு மகன்களை, (மனாசே&எப்பிராயீம்) என் தந்தைக்கு பேரக் குழந்தைகளாயிருந்தாலும், அவர்களை என்னுடைய இடத்தில், தன் சொந்தக் குழந்தைகளாக, அவர் ஏற்றுக்கொண்டார். அது மட்டுமல்லாமல், முதல் மகனான மனாசேயை, இரண்டாவது இடத்தில் வைத்தார். இன்னும் சில நாட்கள் கடந்தன.

ஒரு நாள், என் உடன்பிறந்த 11 பேரையும், என்னையும் அவரிடம் வரும்படி அழைத்தார். நாங்களும் விரைந்தோம். அப்போது, நல்ல நினைவாற்றலுடன், எங்கள் 12 பேருக்குரிய எதிர்காலம் பற்றித் தெளிவாக எடுத்துரைத்தார். வயதான காலத்தில், அவர் எப்படி இறந்த கால நிகழ்ச்சிகளை, நல்ல ஞாபகத்தில் வைத்திருக்கிறார் என்பது மட்டுமல்லாமல், அவர்களுடைய எதிர்காலமும் சொல்லுகிறார் என நினைத்து, மிகவும் வியப்படைந்தேன். இவைதான் அவர் சொன்னதின் தொகுப்பு:

1. **ரூபன்** – முதல் மகன்; ஆனால், ஒரு தவறு செய்து விட்டார். ஆகவே அவர் மேன்மை பெறமுடியாது.

2. & 3 **சிமியோன்** & **லேவி** – ஒருமுறை கொடுமையாக ஒரு ஊரையே அழித்தார்கள் – அந்த வன்முறை சரியல்ல.

4 **யூதா**: புகழப்படுகிற அண்ணன். அவர் பற்றிச் சொல்லப்பட்ட வார்த்தைகள், எனக்குச் சரியாக விளங்கவில்ல; ஆனால், வியப்பளித்தன. "சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவை விட்டு நீங்குவதில்லை" யார்? அந்த சமாதான கர்த்தர் என்று விளங்கவில்லை; ஆனால், ஒரு மகத்தான கர்த்தர் (ஆண்டவர்) யூதா கோத்திரத்தில்; எதிர்காலத்தில் வருவார் என்னும் உண்மை தெரிந்தது.

5. **செபுலோன்** – கடற்கரை அருகே வாழுவார்.

6. **இசக்கார்** – வசதியாக வாழுபவர்.

7. **தாண்** – நியாயம் விசாரிப்பவர்.

8. **காத்** – படைகளை உடையவர்.

9. **ஆசேர்** – கொழுமையான உணவு படைத்தவர்.

10. **நப்தலி** – இன்பமான உரையாடலில் சிறந்தவர்.

11. **யோசேப்பு** என்னும் நான் : மற்றவர்களைக்காட்டிலும், அதிகமாக என்னைப்பற்றிச் சொன்னார். அவர் சொன்ன கீழ்க்கண்ட சொற்கள், என் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருக்கின்றன. இவைதான் அவை:

யோசேப்பு கனிதரும் செடி; அவன் நீர் ஊற்றண்டையில் உள்ள கனிதரும் செடி. அதின் கொடிகள் சுவரின்மேல் படரும். வில்வீரர் அவனை மடிவாக்கி, அவன்மேல் எய்து, அவனைப் பகைத்தார்கள். ஆனாலும், அவனுடைய வில் உறுதியாய் நின்றது. அவன் புயங்கள் யாக்கோபுடைய வல்லவரின் கரங்களால் பலத்தன. இதினால், அவன் மேய்ப்பனும் இஸ்ரவேலின் கன்மலையும் ஆனான்.

கட்டிலில் படுத்துக்கொண்டே இவற்றைச் சொல்லிக்கொண்டு வந்தவர், திடீரென்று, என்னை அருகில் அழைத்து, என்னைப் பார்த்து கீழ்க்கண்டவாறு கூறினார்:

உன் தகப்பனுடைய தேவனாலே அப்படி ஆயிற்று. அவர் உனக்குத் துணையாயிருப்பார். சர்வவல்லவராலே (எல்ஷடாயாலே) அப்படி ஆயிற்று. அவர் உன்னை எல்லா வகை ஆசீர்வாதங்களாலும் ஆசீர்வதிப்பார். நீதான் உன் சகோதரர் எல்லோரிலும் சிறந்தவன். நம் முன்னோர்களின் எல்லா ஆசீர்வாதங்களும் உனக்குக் கிடைப்பதாக." இதைச் சொல்லும்போது அவர் முகம் மலர்ந்தது. என் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது.

12. **பென்யமீன்** – அவனைப் பீறுகின்ற ஓநாய் என்றும், காலையில் வேட்டையாடி மாலையில் பங்கிடுவான் என்றும் கூறி முடித்தார்.

நாங்கள் 12 பேரும் அமைதியாய் அவரருகே நின்று கொண்டிருந்தோம். அவர் தொடர்ந்தார்: நான் விரைவில் மறையப்போகிறேன். என்னை என் முன்னோரின் கல்லறை இருக்கும் கானான் நாட்டில், ஆபிரகாம் வாங்கிய நிலத்தில் அடக்கம் பண்ணுங்கள். அங்குதான் ஆபிரகாம், சாராள், ஈசாக்கு, ரெபெக்காள் என்னும் என் முன்னோர்களும், என் முதல் மனைவியான லேயாளும் அடக்கம் பண்ணப்பட்டிருக்கிறார்கள். அந்த நிலம், வாங்கப்பட்ட நிலம். நமக்கு உரிமையானது.

இந்தக் கடைசி வார்த்தைகளுடன், அவர் உயிர் பிரிந்தது. சகோதரர்கள் யாவரும் அழத்தொடங்கினர். யோசேப்பாகிய நான், அவர் முகத்தின்மேல் விழுந்து அழுதுகொண்டே, அவரை முத்தமிட்டேன். யாக்கோபு என்னும் இஸ்ரவேலின் உலக வாழ்வு முடிந்தது.

ஆனால், அவருடைய பெயர் ஆபிரகாம் – ஈசாக்கு – யாக்கோபு என்னும் மூவரணியில் ஒன்றானது.

தேவாதி தேவனே தன்னை அறிமுகம் செய்யும்போது "நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமானவர்" என்று கூறுமளவுக்கு என் தந்தையின்

வாழ்வு அமைந்துவிட்டது.

யாக்கோபு என்னும் இஸ்ரவேலின் அற்புதமான வாழ்வுக்காக, அந்த ஆண்டவரைத் துதித்தேன். எகிப்தியப் பண்பாட்டின்படி, அவருடைய உடல் மருத்துவர்களால் பாதுகாக்கும் பணியில் (சுகந்தவர்க்கமிடுதல்) நாற்பது நாட்கள் நடந்தன. அத்துடன் எழுபது நாட்கள் துக்கம் கொண்டாடுதலும் நடந்தது.

பேரரசர் பார்வோனிடம் நான் என் தந்தையின் உடலைக் கானான் நாட்டில் கொண்டுபோய், எங்களுக்கு உரிமையான கல்லறையில் அடக்கம் செய்ய அனுமதி கேட்டேன். அவரும் அனுமதி வழங்கினார்.

நான் பார்வோனுக்கு அடுத்த நிலையில் இருந்தவன். ஆகவே, அந்த நாட்டின் பெரிய அதிகாரிகள் அனைவரும் என் வீட்டாரும் இரதங்களில் புறப்பட்டோம். குதிரை வீரர்களும் உடன் வந்தனர்.

வழியில் ஓரிடத்தில் ஏழுநாள் துக்கம் கொண்டாடினோம். கானானியர் "இது எகிப்தியருக்கு பெரிய துக்கங் கொண்டாடல்" என்று பேசிக்கொண்டார்கள்.

எங்களுக்கு எல்லாம் முன்னோடியாக இருந்த ஆபிரகாம், ஏத்தியானான எப்பிரோனிடம் வாங்கிய அந்த நிலத்திலே, என் தந்தையின் கடைசி விருப்பத்தின்படி அடக்கம் செய்தோம். பின்னர் யாவரும் எகிப்துக்குத் திரும்பினோம்.

பல ஆண்டுகள் என் தந்தையான யாக்கோபைப் பார்க்காமல் வாழ்ந்தவன் நான். ஆனால், அவர் எங்கோ இருக்கிறார் என்ற எண்ணம் எனக்குத் தெம்பளிக்கும்.

ஆனால், இன்று அவர் எங்களோடு இல்லை. அவர் போற்றி, வணங்கி, ஆராதித்த அந்த தேவாதி தேவன் என்னும் எல்ஷடாய் (எல்லாம் வல்ல இறைவன்) என்னோடு இருக்கிறார். அந்த நினைவு என்னைத் திடப்படுத்தியது.

*****

**கனவுகள் தொடரும்...**

# 2025 செப்டம்பர் மாத வேத வினாக்களுக்கு விடைகள்

## அப்போஸ்தலர் 1-7 அதிகாரங்கள் வரை

**பொருத்துக**

1. ஒலிவமலை – எருசலேம் 1:12
2. யுஸ்து – பர்சபா 1:23
3. பொந்து – பிரிகியா 2:9
4. மாமிசம் – நம்பிக்கை 2:26
5. காரானூர் – மெசொப்பொத்தாமியா 7:2

**கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. பரிசுத்த ஆவி, பெலனடைந்து, எருசலேமிலும், சமாரியாவிலும், சாட்சிகளாயிருப்பீர்கள். 1:8
2. உயர, அற்புதங்களையும், பூமியிலே, இரத்தம், அக்கினி, அதிசயங்களையும் 2:19
3. வானம், சிங்காசனம், பாதபடியுமாயிருக்கிறது 7:49
4. கைகளினாலே, அடையாளங்களும், அற்புதங்களும் 5:12
5. விசுவாசிகளாகிய, இருதயமும், மனமுமுள்ள 4:32

**விடை எழுதுக**

1. 40 நாள் 1:3
2. அநீதத்தின் கூலியினால் 1:18
3. அப்போஸ்தலருடைய உபதேசம், அந்நியோந்நியம், அப்பம் பிட்குதல், ஜெபம் பண்ணுதல் 2:42
4. மூன்று மாதம் 7:20
5. விசுவாசத்தினாலும், வல்லமையினாலும் நிறைந்தவனாய் ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தான். 6:8

# துதித்து மன்றாடுவோம்

## தமிழ்நாடு

அக்டோபர்-1

**கள்ளக்குறிச்சி மாவட்டம்**
**அருட்பணியாளர்: திரு. காவியகாந்த்**
**திருமதி.செல்வி**

புதிதாக நற்செய்தி அறிவிக்கப்பட்ட லோகநாதன், ராமன், அஜித்குமார், சிவகாமி, லதா, பழனிசாமி ஆகியோருக்காக, நற்செய்தி பணி செய்யப்பட்ட, வெள்ளிமலை, கெண்டிக்கல், மேல் வென்னியூர், செங்கப்பாடி ஆகிய கிராமங்களுக்காக, வெங்கடேசன் குடும்பமாக ஆராதனையில் பங்கு பெறுவதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**கடலூர் மாவட்டம்**
**அருட்பணியாளர் : திரு. M. லிங்கம்**
**திருமதி. கலா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அருகேரி, வடகரை, தொளார், எறப்பாவூர், மருவத்தூர், பொன்னேரி, பெண்ணாடம் ஆகிய கிராமங்களுக்காக, வினுவிற்கு 7 வருடத்திற்கு பின்பு குழந்தை பாக்கியம் கிடைத்ததற்காக, மஞ்சுவின் தாயாருக்கு கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்ட தாத்து, திலகம், கதிரவன், திவ்யா, வினு, பரமசிவம், ராஜா, குணமங்கை, சுகந்தி, ரகு ஆகியோர் இரட்சிக்கப்பட, தாத்து பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற, வீரமணி, விக்னேஷ், வளர்மதி, மோனிஷா, வைஷ்ணவி, முருகானந்தம் ஆகியோர் திருமுழுக்கு எடுக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. V.சிவராமன்**
**திருமதி. பெரியநாயகி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சுமைதாங்கி, செம்பேரி, இருளம்பட்டு, சின்ன கொசபள்ளம், கீரனூர் ஆகிய கிராமங்களுக்காக, ரேகா (வயிற்று வலி), மீரா (கெட்ட சொப்பனம் மற்றும் தூக்கமின்மை) ஆகியோருக்கு தேவன் தந்த சுகத்திற்காகத் துதிப்போம். ரகுவுக்கு நல்ல ஞானம் கிடைக்க, லட்சுமி பக்க வாதத்திலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

**ஈரோடு மாவட்டம்**
**அருட்பணியாளர்:** அக்டோபர்-2
**திரு.G.தனம் யோகராஜ் – திருமதி.டான்சி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சென்னம்பட்டி, குருவை ஆகிய கிராமங்களுக்காக, சுகுணா, ராஜேந்திரன், ஈஸ்வரி ஆகியோர் நற்செய்தியை ஆர்வமாகக் கேட்டதற்காக, கீர்த்தனா, அமுதா ஆகியோர் புதிதாக ஆலயம் வருவதற்காகத் துதிப்போம். ஈஸ்வரி நுரையீரல் நோயிலிருந்து சுகம் பெற, கீர்த்தனாவுக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்க, ராஜேந்திரன் குடும்பம் இரட்சிக்கப்பட, சபையில் உடன் ஊழியர்கள் எழும்ப ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. அதிசய அமலன்**
**திருமதி. ஆனந்தி விமலா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஆண்டிப்பாளையத்திற்காக, நாகம்மா, முருகேஷ் ஆகியோர் விசுவாச வாழ்வில் வளருவதற்காக, ஈஸ்வரி சிறுவர் ஊழியம் செய்வதற்காக, பூவரசன், யோகேஷ் ஆகியோர் இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காகத் துதிப்போம். நாகம்மாள், அன்னக்கொடி, பெரியசாமி, மோனிஷா, கனிஷ்கா, தனுஷா, சஞ்சய், தமிழரசி, பூவிகா , பூமிகா, மருதாச்சலம் முருகன், ராஜன், கேசவமூர்த்தி, லட்சுமி, கலைவாணி, சண்முகம், தங்கமணி, பெருமாள் ஆகியோர் விசுவாசத்தில் வளர, அமாவாசை நரம்பு தளர்ச்சி நோயிலிருந்து சுகம் பெற, தீபா சிறுவர் ஊழியம் ஆர்வமாகச் செய்ய, ரேவதிக்கு சுகப்பிரசவம் கிடைக்க, சுரேஷ், பிரியா, மோனிஷ், பூவரசன் ஆகியோர் குடும்பமாக இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**கோயம்புத்தூர் மாவட்டம்**
**சுயசார்புத் திருச்சபை**

அருட்பணியாளர் : திரு. லூர்டஸ்
திருமதி. கிளாடிஸ்

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பில்சின்னம்பளையம், குள்ளேகவுண்டனூர், உப்பிலியனூர், பூவலப்பருத்தி, சமத்தூர், கோட்டூர், வாய்க்கால்மேடு, கணபதிபாளையம் ஆகிய கிராமங்களுக்காக, சீனிவாசன், சரவணகுமார், நாகேந்திரன், முனிப்பாஷா, நிஜாம், கலையரசி, வாணி ஆகியோர் நற்செய்தியை ஏற்றுக்கொண்டதற்காக, சாமுக்கு புதிய வாகனமும் புதிய தொழிலும் தேவன் தந்ததற்காக, பொன்ராஜ் நிறைவான சுகம் பெற, ராணி, ஜேனட், ஜான்சி ஆகியோருக்கு சுகப்பிரசவம் கிடைக்க, ஜெசிந்தா அம்மா பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற, ஆலயத்தின் மராமத்து பணிக்கான தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

அக்டோபர்-3

அருட்பணியாளர்: திரு.எபிநேசர்
திருமதி. மேரி

எபினேசரின் பேரனுக்கு தேவன் கொடுத்த சுகத்திற்காக, புதிதாக நற்செய்தி கேட்ட கார்த்திக்காகத் துதிப்போம். கருப்பசாமி, ஜெயக்குமார், சுமதி, சித்ரா, அற்புதராஜ், துரையன், ராஜன் ஆகியோர் இரட்சிக்கப்பட-சபை ஆராதனையில் கலந்து கொள்ள, ரெபேக்காள் கால் வலியிலிருந்து சுகம் பெற, அற்புத மேரியம்மாள் சர்க்கரை நோயினால் ஏற்பட்ட கால் புண்ணிலிருந்து சுகம் பெற, நாத்தான் திருமணத் தேவைகள் சந்திக்கப்பட, கிருபைக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

சுயசார்புத் திருச்சபை

அருட்பணியாளர் :
திரு. இம்மானுவேல் கிளமென்ட் கிப்ட்சன்
திருமதி. செல்லாண்டீஸ்வரி

நற்செய்தி அறிவிக்கப்பட்ட நாட்டுக்கல்பாளையம் கிராமத்திற்காக, மீகாள், ஜெசிக்கா, சக்தி ஆகியோர் விசுவாச வாழ்வில் வளருவதற்காகத் துதிப்போம். லீதியாள், ரூபவதி, ஜோஸ்வா, ராதா, பிரியா, கௌரி ஆகியோர் ஆராதனையில் கலந்து கொள்ள, பிரபு வழக்கிலிருந்து விடுபட, நந்தகுமார், ரஞ்சித், சாமுவேல், சந்தோஷ், ஜான்வெஸ்லி ஆகியோர் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

அருட்பணியாளர் :
திரு. R. ஸ்டீபன் செல்வகுமார்
திருமதி. கரோலின்

நற்செய்தி அறிவிக்கப்பட்ட வாழைக்கொம்பு கிராமத்திற்காக, ராஜ்குமார், ராணி, வேல்முருகன், பரமேஸ்வரி, செரினா ஆகியோருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக, உம்சல்மா புற்று நோயிலிருந்து சுகம் பெற்றதற்காக, பேச்சுத் திறனற்ற சர்வேஸ்வரன், ஜெபத்திற்கு பிறகு பேசினதற்காக, சுகன்யாவுக்கு தேவன் கொடுத்த கர்ப்பத்தின் கனிக்காகத் துதிப்போம். திருமுழுக்கு எடுக்க ஆயத்தமாக உள்ள பழனி, தீனா, சுவாதி ஆகியோருக்காக, ஆலயத்திற்கு இடம் வாங்கப்பட, ஊழியரின் சுகத்திற்காக, இஸ்லாமியர்களுக்கு நற்செய்தி அறிவிக்கவுள்ள தடைகள் விலக ஜெபிப்போம்.

அக்டோபர்-4

திருப்பூர் மாவட்டம்

அருட்பணியாளர்: திரு. S. பால்ராஜ்
திருமதி. மரியாள்

நற்செய்தி அறிவிக்கப்பட்ட குருணைக்கல்பட்டி கிராமத்திற்காக, நிஷாந்துக்கு (தொண்டை) அறுவைச்சிகிச்சை நல்லமுறையில் நடைபெற்றதற்காக, சூர்யாவுக்கு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை நல்ல முறையில் நடைபெற்றதற்காகத் துதிப்போம். ரவியின் வீடு கட்டுமானப் பணிக்கான தேவைகள் சந்திக்கப்பட, ஷக்கீனாவின் கல்லூரிக் கல்வி கட்டணத்தேவைகள் சந்திக்கப்பட, ஆலய கட்டுமானப் பணி விரைவில் ஆரம்பிக்கப்பட, குப்புசாமி குடும்பம் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

அருட்பணியாளர் : திரு.G. பால்துரை
திருமதி. ஜெபரூபி

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கிளாங்குண்டல், வடுகப்பட்டி, அறிவொளி நகர், புதுக்கோட்டை ஆகிய கிராமங்களுக்காக, மேரி, கண்ணம்மா, ரெபேக்காள், சுந்தரம்மாள் ஆகியோருக்கு கண் அறுவைச்சிகிச்சை நல்ல முறையில் நடைபெற்றதற்காகத் துதிப்போம்.

அலெக்சுக்கு வேலை கிடைக்க, ராஜேஷ், செல்வி ஆகியோருக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க, சக்தி–வனிதா (திருமணமாகி 21 வருடம்) தம்பதியினருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, நடராஜ், அருக்காணி, செல்வி, தமிழரசி, வசந்தி, மேரி, செல்வி, வனிதா ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் :**

**அருள்திரு. சாலமோன்ராஜ்**
**திருமதி. ஜெயக்கொடி**

தடைபட்டிருந்த சிவக்குமார், சந்திரன், எஸ்தர், பூபாலன் ஆகியோருடைய வீட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதற்காக, சங்கீதா, பெஞ்சமின், குமார், மஞ்சுளா ஆகியோர் வீடு கட்ட இடம் வாங்கியதற்காக, பாப்பா, மரகதம், திருமா, ஈஸ்வரி, கந்தசாமி ஆகியோர் புதிதாக ஆலயம் வந்ததற்காக, கலையரசி, மணிமேகலை, சந்தியா, சரஸ்வதி ஆகியோர் குடும்பத்தில் சமாதானம் கிடைத்ததற்காக, சிவராஜ், செல்லம்மாள், மாலதி, லதா, சுமதி ஆகியோர் ஆராதனையில் கலந்து கொண்டதற்காகத் துதிப்போம். செல்விக்கு (கழுத்து, தோள்பட்டை வலி, தோல் நோய்) நிறைவான சுகம் கிடைக்க, கண் பார்வையற்ற கோபால், சத்தியா, சாமுவேல் ஆகியோரைத் தேவன் பாதுகாக்க, செல்லம்மாள், ஆறுமுகம் ஆகியோர் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற, காளியம்மாள், கோபால், சத்தியா, பாப்பா ஆகியோர் குடும்பத்தில் சமாதானம் கிடைக்க, ஊழியர் முதுகு தண்டுவட நோயிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

**திருச்சி மாவட்டம்**



**அருட்பணியாளர் : திரு. S.ஜெயக்குமார்**
**திருமதி. மரிய செல்வம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட உப்பிலியாபுரம், வெங்கடாசலபுரம், சிக்கந்தப்பூர்பாளையம், சிக்கந்தப்பூர் சோபனபுரம், கொட்டம்பட்டி, மங்கபட்டி, வைரசெட்டிபாளையம், மாராடி, ஒக்கரை, புதுப்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, சுசித்ரா டெங்கு காய்ச்சலிலிருந்து சுகம் பெற்றதற்காக, ஆராதனா இருதய நோயிலிருந்து சுகம் பெற்றதற்காக, மகேஸ்வரிக்கு வேலை கிடைத்ததற்காக, ஸ்டீபன் குமார் வீடு கட்டுமானப் பணி தடை இல்லாமல் நடைபெறுவதற்காக, எபிக்கு இரண்டாவது அறுவைச் சிகிச்சை நல்லமுறையில் நடைபெற்றதற்காகத் துதிப்போம். நற்செய்திக்கு ஆர்வம் காட்டும் பிரகாஷ், சிவலிங்கம், ரேவதி, முருகன், செல்லையா, மதிவாணன் ஆகியோர் இரட்சிக்கப்பட, சரவணன், அமுதா ஆகியோர் இரட்சிக்கப்பட–கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற–கோழிப்பண்ணைத் தொழில் நன்றாக நடைபெற, ஜோதி–கருப்பணன் குடும்பத்தில் சமாதானம் நிலவ, தருண் பரத்திற்கு வேலை கிடைக்க, ஊழியர் வீடு கட்டுமான பணி தடையின்றி முடிவடைய ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு.B. தினேஷ் – திருமதி. எமீமா பியூலா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கீழ்குறிச்சி, பொன்மலைப்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, சாந்திக்கு அங்கன்வாடியில் வேலை கிடைத்ததற்காக, ப்ரீத்திக்கு வேலை கிடைத்ததற்காக, ரேவதியின் குடும்பத்தில் சமாதானம் கிடைத்ததற்காகத் துதிப்போம். கனிமொழியின் குழந்தைக்கு நிறைவான சுகம் கிடைக்க. ஸ்ரீப்ரியாவுக்கு சுகப்பிரசவம் கிடைக்க, அஜய் (ஐந்து வயது) புற்று நோயிலிருந்து நிறைவான சுகம் பெற, விபத்தில் பாதிக்கப்பட்ட நிவேதாவின் கணவர் நிறைவான சுகம் பெற ஜெபிப்போம்.

**மதுரை மாவட்டம்**

**அருட்பணியாளர் : திரு. வின்சென்ட்**
**திருமதி. பவுலின் கிரேஸ்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட புளியகவுண்டன்பட்டி, வடக்கம்பட்டி, முண்டுவேலம்பட்டி காலனி, திடியன், வலங்காகுளம், மேட்டுப்பட்டி, கோட்டையூர் ஆகிய கிராமங்களுக்காக, மகேந்திரன், துரைச்சாமி ஆகியோர் புதிதாக சபைக்கு வருவதற்காக, மூன்று இடங்களில் சிறுவர் ஊழியம் ஆரம்பிக்கப்பட்டதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்ட துரைசாமி, கலையரசி, சீதாலட்சுமி, பாண்டி,

செல்லப்பொண்ணு, பகத்சிங், அம்மாவாசி, முனியாண்டி, அஞ்சுகம், பாண்டீஸ்வரி, லட்சுமி, ஈஸ்வரி, அம்பிகா, பிரேமலதா, பாண்டிச்செல்வி, இந்திராணி, பாண்டியம்மாள், ராசமணி, செல்வி ஆகியோர் இரட்சிக்கப்பட, கீழக்குயில்குடியில் ஜெபக்குழு மற்றும் கிளை ஊழியங்கள் ஆரம்பிக்கப்பட, புஷ்பம், மாயக்காள் ஆகியோர் கை கால் வலியிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. S. சாமுவேல்**

அக்டோபர்-6

**திருமதி. ரோகிணி**

பஞ்சு, உமாதேவி, முருகவள்ளி, சத்தேஸ்வரி ஆகியோர் நற்செய்தியை ஆர்வமாகக் கேட்டதற்காக, பாண்டியன் புதிதாக தொழில் தொடங்கியதற்காக, பிரபுவுக்கு நிரந்தர வேலை கிடைத்ததற்காகத் துதிப்போம். முருகவள்ளி, சத்தீஸ்வரி ஆகியோருக்கு விரைவில் திருமணம் நடைபெற, தவமணி மூட்டுவலியிலிருந்து சுகம் பெற, ஆலயம் கட்டப்பட, கிளைச் சபைகள் உருவாக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. பிரவீன்குமார்**
**திருமதி. மீனா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சமத்துவபுரம், சுப்பலாபுரம், குளத்துவாய்பட்டி, காமாட்சிபுரம், வெயிலுகந்தாபுரம், வீரப்பெருமாள்புரம், தூம்பக்குளம், திருமால் ஆகிய பகுதிகளுக்காக, நற்செய்தியைக் கேட்ட ராஜா, மணிகண்டன், கருப்பு, மதன், தெய்வத்தாய், ரேவதி, லட்சுமி, ராஜாமணி, செல்லையா ஆகியோருக்காக, கருப்பு கைவலியிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். கண்ணனுக்கு அரசு வேலை கிடைக்க, கருப்புவின் வீடு கட்டப்பட- தேவைகள் சந்திக்கப்பட, மதன் குமார் தொடர்ந்து சபைக்கு வர-குடும்பம் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. M. கார்த்தி**
**திருமதி. ரீஜா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சென்னம்பட்டி, செம்பரணி, பூசலப்புரம் ,சின்னக்கட்டளை, ஜம்பலபுரம் ஆகிய கிராமங்களுக்காக, நற்செய்தி ஆர்வமாய் கேட்ட முருகேசன், லட்சுமணன், பாப்பாத்தி அம்மா ஆகியோருக்காகத் துதிப்போம். ஆபிரகாம், டேனியல் ஆகியோருக்கு திருமணம் நடைபெற, நல்ல மழை கிடைக்க ஜெபிப்போம்.

அக்டோபர்-7

**அருட்பணியாளர் : திரு. A. கந்தசாமி**
**திருமதி. முருகம்மாள்**

நற்செய்தி கேட்ட காளித்தாய், கவி, முருகேஸ்வரி, ராஜதுரை, மகிமா, சுமதி, சுப்புராவ், மேனகா, கதிர்வேலன் ஆகியோருக்காக, ரேஷ்மா மஞ்சள் காமாலை நோயிலிருந்து சுகம் பெற்றதற்காக, ஜெயராணி கால் வலியில் இருந்து சுகம் பெற்றதற்காக, கஸ்தூரி பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றதற்காகத் துதிப்போம். சுபாவுக்கு சுகப்பிரசவம் கிடைக்க, பிரகாசுக்கு திருமணம் நடைபெற, பீட்டர் மனநோயிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. P. சத்தியநாதன்**
**திருமதி. கிறிஸ்டி**

நற்செய்திப்பணி செய்யப்பட்ட போத்தநதி, ரெட்ரப்பட்டி, முத்துலிங்காபுரம் ஆகிய கிராமங்களுக்காக, உஷாவின் வீடு கட்டி முடிக்கப்பட்டதற்காக, விஜயலட்சுமி பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றதற்காக, கத்தீஸ்வரன் திருமணத்திற்கானத் தேவைகள் சந்திக்கப்பட்டதற்காகத் துதிப்போம். சந்திரா குடும்பத்தில் சமாதானம் கிடைக்க- வீடு கட்டப்பட, ஜோதி கடன் பிரச்சினையிலிருந்து விடுதலை பெற-இரட்சிக்கப்பட, பத்மாவதியின் கணவர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, மகேஸ்வரிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :திரு. P. ராஜா**
**திருமதி. அன்னாள்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கரடிக்கல் கிராமத்திற்காக, மீனாட்சி குடும்பத்தில் சமாதானம் கிடைத்ததற்காக, காமாட்சி புற்று நோயிலிருந்து சுகம் பெற்றதற்காக, குன்னனம்பட்டி, மொட்டப்பாறை ஆகிய கிராமங்களில் சிறுவர் ஊழியம் சிறப்பாக நடைபெற்றதற்காகத் துதிப்போம். வான்மதி யானைக்கால் நோயிலிருந்து சுகம் பெற,

சுசீலா (இடுப்பு எலும்பு முறிவு– புற்று நோய்) நிறைவான சுகம் பெற, தினகரனை இழந்த குடும்பத்தாருக்கு தேவன் ஆறுதல் தர ஜெபிப்போம்.

**அக்டோபர்-8**

**அருட்பணியாளர் : திரு. காளிமுத்து**
**திருமதி. குமுதா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பெருங்காமநல்லூர், அழகுரெட்டிபட்டி, காளப்பன்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, நற்செய்திக்கு ஆர்வம் காட்டும் லட்சுமி அம்மாவுக்காக, காளப்பன்பட்டி எஸ்தரம்மா வீட்டில் ஜெபக்கூட்டம் நடைபெற்றதற்காக, தண்ணீர் தொட்டியில் தவறி விழுந்த பவுன்ராஜ் எந்த சேதமுமின்றி பாதுகாக்கப்பட்டதற்காகத் துதிப்போம். தமிழரசி இருதய நோயிலிருந்து நிறைவான சுகம் பெற, லட்சுமி, அல்லிராணி ஆகியோர் இரட்சிக்கப்பட, அலெக்ஸ் பாண்டிக்கு திருமணம் நடைபெற, அமுதா குடும்பத்தில் சமாதானம் கிடைக்க ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் : திரு. ஏனோக்**
**திருமதி.பாலின் சௌந்தர்யா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஜோதிமாணிக்கம், கொடிக்குளம் ஆகிய கிராமங்களுக்காக, பிரபாகரன் புதிய வீடு கட்டியதற்காக, ஜெயமணி மின்சார விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காக, மாரியப்பன் விஷப்பூச்சி(பாம்பு) கடியிலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காக, வினோத் நுரையீரல் நோயிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். கிறிஸ்டினா, சுவேதா ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, இம்மானுவேல் இடப்பிரச்சனையில் சமாதானமான முடிவு கிடைக்க, தனபாண்டிக்கு திருமணம் நடைபெற ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் : திரு. M. அகஸ்டின்**
**திருமதி. ஜோஸ்பின்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட செல்லம்பட்டி, மணல்பட்டி, காந்திநகர், சங்கம்பட்டி, சக்கரப்பட்டி, கருமாத்தூர் ஆகிய கிராமங்களுக்காக, தனம் கால் முறிவிலிருந்து சுகம் பெற்றதற்காக, குமார்–வனிதா வீடு கட்டி முடிக்கப்பட்டதற்காக, கீர்த்திக்கு வேலையில் இடமாற்றம் கிடைத்ததற்காக, கோபால் புதிதாக வியாபாரம் ஆரம்பித்ததற்காக, அன்புக்கு கிடைத்த வேலைக்காகத் துதிப்போம். தகப்பனாரை இழந்த சாந்தி குடும்பத்திற்கு கடவுள் ஆறுதல் தர, திவ்யாவின் திருமணத்திற்கான பணத் தேவைகள் சந்திக்கப்பட, பரமன் நல்லமுறையில் நடக்க– மீண்டும் ஆலயம் வர, ஹரியின் குடும்பத்தில் சமாதானம் கிடைக்க ஜெபிப்போம்.

**அக்டோபர்-9**

**அருட்பணியாளர் :**
**சகோதரி. எஸ்தர் செல்வராணி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட லிங்கப்பநாயக்கனூர், சுளிஒச்சன்பட்டி, திம்மநத்தம் ஆகிய கிராமங்களுக்காக, ஈஸ்வரன், ராமர் ஆகியோர் சுகம் பெற்றதற்காக, ரமேஷின் பிரிந்த குடும்பம் இணைந்ததற்காகத் துதிப்போம். ஈஸ்வரன், பாண்டி அம்மா, மயில் அம்மா, பரமசிவன், ஒச்சான், திவ்யா ஆகியோர் திருமுழுக்குப் பெற, சண்முகத்தாய்க்கு வரவேண்டிய பணம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**
**அருள்திரு.M. மூவேந்திரன்**
**திருமதி. விஜயா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அயோத்திப்பட்டி, வகுரணி, நடுப்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, முத்துசாமி, லெட்சுமி ஆகியோர் விசுவாசத்தில் வளருவதற்காக, ராமாயி மகள், மோசஸ் மணிகண்டன் ஆகியோருக்குத் திருமணம் நடைபெற்றதற்காகத் துதிப்போம். முத்துச்சாமி–லெட்சுமி ஆகியோர் இரட்சிக்கப்பட, பீட்டர் காளிமுத்துவின் தாயார் கர்ப்பப்பை நோயிலிருந்து சுகம் பெற, மகிபன்–ஐஸ்வர்யா தம்பதிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, ஊழியர் மற்றும் ஊழியர் மனைவி ஆகியோருக்கு சரீர பெலவீனம் நீங்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. A. பால்ராஜ்**
**திருமதி. ஏஞ்சல்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கூத்தியார்குண்டு, கப்பலூர், அகதிகள் முகாம் ஆகிய கிராமங்களுக்காக,நற்செய்தி

அறிவிக்கப்பட்ட கண்ணன், விஜயா, விருமாண்டி, செல்வி, அகிலா, பாப்பாத்தி அம்மாள், ராஜா, சோபனா ஆகியோருக்காக, புதிதாக ஆலயம் வந்த விருமாண்டி குடும்பத்திற்காக, கப்பலூரில் புதிதாக துவங்கப்பட்ட ஜெப குழுவுக்காகத் துதிப்போம். விஜயா குடும்பமாக இரட்சிக்கப்பட–தொழில் வளர்ச்சி அடைய, அகிலா குடும்பம் ஒன்று சேர, மாயக்கண்ணன் குடும்பமாக இரட்சிக்கப்பட–குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, செல்விக்கு நல்ல வேலை கிடைக்க– செய்வினைக் கட்டிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. G. ஜெகன்**
**திருமதி. திவ்யா** (அக்டோபர்-10)

நற்செய்தி பணி செய்யப்பட்ட இந்திராநகர், உச்சப்பட்டி, சிவன் நகர், பொம்மையாபுரம், முனியாண்டிபுரம் ஆகிய பகுதிகளுக்காக, புதிதாக நற்செய்தியை கேட்ட வளர்மதி, நடராஜன், அறிவு, வெற்றிச் செல்வம், அமுதா, கார்த்திகா, வசந்தா ஆகியோருக்காக, சந்திரன் மரணப்படுக்கையிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். ஜெயராணி கர்ப்பப்பை நோயிலிருந்து சுகம் பெற, அனுசியா, மரிய ஸ்டெல்லா, வள்ளி, ஜோதி, மணவாளன், முனீஸ்வரி ஆகியோர் இரட்சிக்கப்பட, ஊழியரின் வீட்டுக்கு கழிப்பறை கட்டப்பட, ஜெலின் ஜோஷிபாவிற்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**
**திரு. ஜஸ்டின் சாமுவேல் – திருமதி. சுபா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சாய் கார்டன், சம்பங்கிநகர், காந்திநகர், அம்பேத்கர் நகர், பத்மா நகர் ஆகிய கிராமங்களுக்காக, ரேஷ்மா மீண்டும் ஆரதனையில் கலந்து கொள்வதற்காக, ராஜ்பிரியன், ஞானலீலா, கார்த்திகேயன் ஆகியோர் திருமுழுக்குப் பெற்றதற்காக, சிறுவர் ஆராதனையில் பங்குபெற்ற 30 சிறுவர்களுக்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்ட சிவகுருநாதன், இளங்குமரன், செல்வா ஆகியோர் இரட்சிக்கப்பட– ஏற்ற வாழ்க்கை துணை கிடைக்க, மாலை நேர வகுப்பில் பங்கு பெறுகின்ற 25 மாணவர்கள் விசுவாசத்தில் வளர, பிரபாகரன் சபை ஆராதனையில் மீண்டும் கலந்துகொள்ள, வர்சாவுக்கு விரைவில் திருமணம் நடைபெற ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் : திரு. வயநாட்டுமுத்து**
**திருமதி. கனியமுது**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சொரிக்காம்பட்டி கிராமத்திற்காக, முத்துலட்சுமி, கனகா, பாண்டீஸ்வரி ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, சாந்தகுமார், சாமுவேல் ஆகியோருக்கு நிரந்தரமான வேலை கிடைக்க–ஏற்ற நேரத்தில் திருமணம் நடைபெற, கனிமொழி, வினோதினி, பிரித்திவிராஜ், கோபிகா ஆகியோர் குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்பட, ஐசுவரியா தடையின்றி ஆலயம் வர ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. J. ஜெயகுமார்**
**திருமதி. கனி** (அக்டோபர்-11)

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பல்கலை நகர், தனக்கன்குளம் ஆகிய கிராமங்களுக்காக, அநேக வருடங்கள் கழித்து குழந்தை பாக்கியம் கிடைத்த முனியம்மாவுக்காக, வாலிபர்கள் சிறு பிள்ளைகள் ஊழியத்தில் உற்சாகமாய் கலந்து கொள்வதற்காகத் துதிப்போம். ஊழியர் மனைவிக்கு நிறைவான சுகம் கிடைக்க, தினேஷ், ஜெகதீஸ், ரம்யா, அபி, முகிலன் அஸ்வின், ஆகாஷ் ஆகியோர் இரட்சிக்கப்பட, முத்துராமன், சாந்தி, பேரரசு, மீனா ஆகியோர் திருமுழுக்கு எடுக்க ஜெபிப்போம்.

**தேனி மாவட்டம்**

**அருட்பணியாளர் : திரு. P. தேவதாஸ்**
**திருமதி. பிலோமினா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பாலக்கோம்பை கிராமத்துக்காகத் துதிப்போம். நாமகொடி, தவமணி ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, புதிதாக திருச்சபைக்கு வரும் வீரவேல், சின்னம்மாள் ஆகியோர் திருமுழுக்குப் பெற, பெல்சியாவுக்கு சுகப்பிரசவம் கிடைக்க, ஊழியருக்கு இருசக்கர வாகனம் கிடைக்க

ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு.G. நாதன்**
**திருமதி. மேகலா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கண்டமனூர், பொன்னம்மாள்பட்டி, தேக்கம்பட்டி, சமத்துவபுரம் ஆகிய கிராமங்களுக்காக, இனியா நல்லமுறையில் படிப்பதற்காகத் துதிப்போம். பாபு, வர்ஷா ஆகியோர் சிறுநீரக நோயிலிருந்து சுகம் பெற, தீபனுக்கு விரைவில் திருமணம் நடைபெற, அகிலா கர்ப்பப்பைக்கட்டி நோயிலிருந்து சுகம் பெற, அருண்குமார் முதுகுவலியிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

**அக்டோபர்-12**

**அருட்பணியாளர் :**
**திரு.J.உலகநாதன்–திருமதி. சுபா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மேல்மங்கலம், வடுகபட்டி, தாமரைக்குளம், அழகர் நாயக்கன்பட்டி, பெரியகுளம் ஆகிய பகுதிகளுக்காக, அழகுப்பிள்ளை, ராஜேந்திரன் ஆகியோருக்கு தேவன் தந்த சுகத்திற்காக, முருகையனுக்கு வேலை கிடைத்ததற்காக, நெப்போலியனுக்கு திருமணம் நடைபெற்றதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்ட கிருஷ்ணன், ரோஸ்மேரி, நாகராஜன், பாண்டீஸ்வரி, புகழினி, ரேகா, முத்துராஜா, இருளாயி, ஜெயந்தி ஆகியோர் இரட்சிக்கப்பட, பிச்சை கால் புண்ணிலிருந்து சுகம் பெற, சந்திரா, சுப்புலட்சுமி, மகா ஆகியோர் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற, இராஜேந்திரன் முழங்கால் வலியிலிருந்து சுகம் பெற, ஜெயராமன் இருதய நோயிலிருந்து சுகம் பெற, மகேந்திரன் ஆஸ்துமா நோயிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

**விருதுநகர் மாவட்டம்**

**அருட்பணியாளர் :**
**அருள்திரு.B. சாமுவேல் கணேசன்**
**திருமதி. விஜயா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட தண்டியனேந்தல், தோணுகால் ஆகிய கிராமங்களுக்காக, சபை மூப்பர் சந்தியாகுவுக்கு சர்க்கரை நோயின் தீவிரத்தால் கால் எடுக்காமல் தேவன் பாதுகாத்ததற்காக, காவியா புதிதாக திருச்சபைக்கு வந்ததற்காகத் துதிப்போம். உமா, குருவம்மா, சுகன்யா ஆகியோருடைய குடும்பம் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**தென்காசி மாவட்டம்**

**அருட்பணியாளர் : திரு. J. பவுல்ராஜ்**
**திருமதி. எமீமாள்.**

கார்த்திக்கிற்கு அரசு மருத்துவக்கல்லூரியில் மருத்துவம் படிக்க இடம் கிடைத்ததற்காக, உஷா, சுசீலா (சர்க்கரை நோய்) சுகம் பெற்றதற்காக, சசிக்குமார்–வர்ஷினி ஆகியோரின் திருமணம் நல்லமுறையில் நடைபெற்றதற்காக, கிருஷ்ணவேணி, ஜெனித்தா ஆகியோர் சுகப்பிரசவத்தில் குழந்தை பெற்றதற்காகத் துதிப்போம். பவித்ரா, சுசீலா ஆகியோருக்கு சுகப்பிரசவம் கிடைக்க, ரூபியின் கணவர் மீண்டும் அவரோடு சேர்ந்து வாழ, சாமுவேலுக்கு நல்ல வேலை கிடைக்க, கணேசன், அலெக்சாண்டர், ராமச்சந்திரன் ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அக்டோபர்-13**

**விழுப்புரம் மாவட்டம்**

**அருட்பணியாளர் : திரு.D. தங்கராஜ்**
**திருமதி. எஸ்தர் பிரியா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மடப்பட்டு, கருதப்பட்டு ஆகிய கிராமங்களுக்காக, ஆரோக்கியதாஸ், பன்னீர் செல்வி ஆகியோர் வீடு நல்லமுறையில் கட்டி முடிக்கப்பட்டதற்காக, வெண்ணிலா நெஞ்சுவலியிலிருந்து சுகம் பெற்றதற்காக, ரஞ்சிதா வீடு கட்டப்படுவதற்காகத் துதிப்போம். சுகந்தி, அனிதா, நேத்திரா தேவி, திவ்யா ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, சசி, சுரேஷ் கிருஷ்ணன், சீனி, ராஜேஷ், வெங்கடேஷ், ரமேஷ், சதிஷ், தேவராஜ், ஆரோக்கியதாஸ் ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற– குடும்பமாக இரட்சிக்கப்பட, ஐயப்பன் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**தரிசனம் பரப்புவோர்**

தரிசனம் பரப்புவோர் குடும்பக்கூடுகை நல்லமுறையில் நடைபெற்றதற்காகத் துதிப்போம். இயக்கத்தின் பொருளாதாரத் தேவைகள் சந்திக்கப்பட, புதிய தரிசனம் பரப்புவோர் கிடைக்க, புதிய ஜெபக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட, திரு.T. விஜயசங்கர்

(துரிசனம் பரப்புவோர் உதவி இயக்குநர்), அருள்திரு. பீட்டர் (ஜெப ஒருங்கிணைப்பாளர்), ஊழியர்கள்: திரு.R. பால சுப்பிரமணியன், திருமதி. ஹெர்சி லீதியாள் மாசில்லாமணி, திருமதி.C. மேபல் ராணி, திருமதி. இந்திராணி கில்பர்ட், திருமதி. தீபா மோசஸ், திருமதி.J. பிளஸ்ஸி, திரு. வினு, திருமதி. ராணி வின்செண்ட், திரு.K. பால்ராஜ், திரு.S. சம்பத்குமார், திரு. தாங்லம் ஜோ, திரு. காளிமுத்து, திரு.A. தம்புராஜ், திரு.P. மாரியானந்தன், திருமதி. சுப்புலட்சுமி, திருமதி.T. சுசீலா, திரு.M.M. சாலமோன், திரு.F. ஹென்றி ஜார்ஜ், திருமதி.A. சம்மனஸ் மேரி, திரு.A. ஜோசப் ஆசீர்வாதம், திரு.A. மகுடீஸ்வரன், திரு.ஜேம்ஸ்.P. ரவிக்குமார், திருமதி. திருவாசகி, திருமதி. ஜான்சி தினா, திரு.S. கிருஷ்ணமூர்த்தி, திருமதி.V. சுவேகா, திரு.M. ஞானசேகரன், திரு. ஜெயராமன், திரு. கிறிஸ்டோபால் கணேஷ் ஆகியோரின் பயணப் பாதுகாவலுக்காக, குடும்பங்களுக்காக ஜெபிப்போம்.

**அக்டோபர்-14**

**பணித்தளங்களின் பொறுப்பாளர்கள்**

வடஇந்திய அருட்பணியாளர்களுக்கான சிறப்புக்கூட்டம் நடைபெற்றதற்காகத் துதிப்போம். அருள்திரு.V. இம்மானுவேல் பாண்டி (தென்னிந்திய பணித்தள உதவி இயக்குநர்), திரு.C. ராஜரத்தினம் (சொத்து பராமரிப் பாளர்), திரு. தாங் பாவ் ஹோகிப் (வடஇந்தியப் பணித்தள ஒருங்கிணைப் பாளர்) ஆகியோருக்காக ஜெபிப்போம்.

**மொழிபெயர்ப்புப் பணி**

மொழி பெயர்ப்பாளர் திருமதி. ஷீலா நாகராஜனுக்குத் தேவையான ஞானம் கிடைக்க, மொழி பெயர்ப்பு உதவியாளர்கள் திரு.சுக்மன் மாத்லாம், திரு.சுக்மன் பொட்டாய், செல்வி.மங்கள்தாய் ஆகியோருக்காக, நடைபெற்றுவரும் பழைய ஏற்பாட்டு மொழி பெயர்ப்பு விரைவில் முடிவடைய, யாத்திராகமம் மற்றும் சங்கீதம் ஆகிய மொழி பெயர்ப்பின் ஆய்வுப்பணிகள் நல்லமுறையில் நடைபெற, கோண்டி மொழி ஆடியோ வேதாகமம், தேவையான கோண்டி மக்களுக்கு விரைவில் கிடைக்க ஜெபிப்போம்.

**தலைமை அலுவலகம்**

நிதித்தேவைகள் சந்திக்கப்பட்டு வருவதற்காகத் துதிப்போம். அலுவலகத் தேவைகள் சந்திக்கப்பட, பொதுச்சேவகருக்கு இயக்கத்தை நடத்தத் தேவையான ஞானம், பெலன், வழி நடத்துதல் கிடைக்க, பொதுச்சேவகர் அருள்திரு.அ. லெஸ்லி நாகராஜன், துணைப் பொதுச்சேவகர் திரு.S. டேவிட் சாலமோன், அருள்திரு.G. பொன்னுராஜ், திரு.A. சாம் டென்சிங், திரு.A. ஆஷிஸ், திரு.Y. பிரான்சிஸ் ராஜா, திரு.V.S. தம்பிராஜ், திரு.S. ஞானசேகர், திரு.A. பிரபாகரன், திருமதி. ஜான்ஸி ஜெய கிருபா, திரு.D. சைமன், செல்வி. S.செஹானா ஜெசுனி, திருமதி. சாரா ஜான் ஆகியோருக்காக ஜெபிப்போம்.

**அக்டோபர்-15**

**வளரும் விண்ணரசு**

ஒவ்வொரு மாதமும் இதழ் தடையின்றி வெளியிடப்படுவதற்காக– தேவைகள் சந்திக்கப்படுவதற்காகத் துதிப்போம். இதழில் கட்டுரை எழுதுபவர்களுக்காக, அவர்களுடைய குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்பட, இதழிலுள்ள ஒவ்வொரு பகுதியும் வாசிக்கிறவர்களுக்கு பயனுள்ளதாக இருக்க, ஆசிரியர் குழுவினரின் முயற்சிகள் ஆசீர்வதிக்கப்பட, புதுமையான முறையில் இதழ் வெளியிடப்பட ஜெபிப்போம்.

**நிறுவனர்கள்**

டாக்டர்.N.J. ஞானையா மற்றும் திருமதி. ரஞ்சினி ஞானையா ஆகியோருக்காக, நிறுவனரின் எழுத்துப்பணி மற்றும் அருட்பணி ஊழியங்களுக்காகவும், திருமதி. ரஞ்சினி ஞானையா அவர்கள் பெண்கள் நடுவிலும், வேதபாட வகுப்புகள் மூலமும் செய்து வரும் அருட்பணிகளுக்காகவும் ஜெபிப்போம்.

**நிர்வாகம்**

செயற்குழு உறுப்பினர்கள் திரு.J. எபிநேசர் மார்ட்டின், Dr.S. அருண், திரு.K ஜான்சன், திரு.P. கோபால கிருஷ்ணன், Dr. தினகரன் ரிச்சர்ட், திரு. J.E. பால் ஆபிரகாம்,

திரு. வெஸ்லி ஜோயல் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்காக ஜெபிப்போம்.

**இறையியல் கல்வி** (அக்டோபர்-16)

இறையியல் கல்வி பயிலும் 18 பேருக்காகத் துதிப்போம். சுரேந்திரா காவ்டே, திபேஷ் சலாம், உபேஷ் சலாம், ரமேஷ் வாடே, ராம்நாத் வாடே, லலிதா கருங்கா, சுனிதா வாடே, ரஜனி சலாம், சுக்யாரின் மண்டாவி, அஷ்வந்தி கச்லாம், சவிதா நுரெட்டி, சத்தியசீலன், ரெஜினா மேரி, பிரின்ஸ் ராய்சன், ரேணுகா, ராஜ்மன், சோம்சிங், நெதன்லங் ஆகியோர் சிறப்பான முறையில் இறையியல் கல்வி கற்றுத் தேற ஜெபிப்போம்.

**புலம்பெயர்ந்தோர் அருட்பணியாளர்:**

**கன்னியாகுமரி மாவட்டம்**

**அருட்பணியாளர்: திரு. ஓமெந்திராகுமார்**
**திருமதி. சவீத்தா குமாரி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கம்பிபாலம், ஆசாரிபாலம், பர்கயீ, தேக்கம்புத்தூர், பட்சேரி, ராமன்புத்தூர், கோணம், சைமன் நகர், பார்வதிபுரம் ஆகிய பகுதிகளுக்காக, புதிதாக நற்செய்தி அறிவிக்கப்பட்ட உதய், லட்சுமண் சைனி, பங்கஜ் யாதவ், மனோஜ்குமார், சுனில் குமார், ரிஜ்வான்கான், குமார்சிங், அனுப்குமார், அஜ்பல்மரண்டி, அனித்தா, லகேஷ், பஜன்டோ, ஜுலோ, மோடோலி, தீபாலி, பிரதீப், பவித்ரா, கமல் ஆகியோருக்காக, அஞ்சு பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்று, இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காக, ஜுலி, அபிகாயில் ஆகியோர் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். பிரமிளா வாணி மூலநோயிலிருந்து நிறைவான சுகம் பெற, சங்கீதாவிற்கு சுகப்பிரசவம் கிடைக்க, சுபாஷ்–அனிதா தம்பதியினர் மீண்டும் சேர்ந்து வாழ ஜெபிப்போம்.

**சென்னை மாவட்டம்**

**திரு. தினகரன்**
**திருமதி. லீனா குமாரி கிரேஸ்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட தாம்பரம், கேபிகே நகர், கல்லுக்குட்டை, தரமணி ஆகிய பகுதிகளுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட ஆயேஷ், மஞ்சித், சந்தீப், இஸ்ரேல், ஆரிப், மஜித்து, சங்கர், சஞ்ஜித் பாஸ்வான், ஜித்தேன், நீலம், ராமசாமி ஆகியோருக்காகத் துதிப்போம். ஆசூய், ஏலிங், கெகாதாங், ஆலுங் ஆகியோர் விசுவாசத்தில் வளர, சஞ்ஜித் பாஸ்வான் இரட்சிக்கப்பட, சோனிகுமாரிக்கு சுகப்பிரசவம் கிடைக்க, நித்தின்–நீலம் ஆகியோர் குடும்பம் ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம். (அக்டோபர்-17)

**மத்திய இந்தியா – மகாராஷ்டிரா**
**அருட்பணியாளர்:**
**திரு. க்யானேஷ் லால்பகதூர் தாக்குர்**

ஜுனோனா, பத்மாபூர் ஆகிய இடங்களில் ஆராதனைகள் நடைபெறுவதற்காக, மாலைநேர வகுப்புகள் நடைபெறுவதற்காக, சாகர் நீண்ட நாட்களுக்கப் பிறகு சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். மாலைநேர வகுப்புகள் மூலமாக சந்திக்கப்படும் மாணவர்கள் இரட்சிக்கப்பட, நல்லமுறையில் கல்வி கற்க, லாகமில் ஆலயம் கட்ட இடம் வாங்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. ஃபனின்ட்ரா பார்**

சபை தரத்திலும், எண்ணிக்கையிலும் வளர, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**மத்தியப் பிரதேசம்**
**அருட்பணியாளர்:**
**திரு. தனுவா டோங்ரியா**

ஜெபத்தின் மூலம் ஊழியர் முதுகுவலியிலிருந்து சுகம் பெற்றதற்காக, சுனிதா தாரிஹா பித்தப்பைக்கல் நோயிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். ஞாயிறு ஆராதனை, உபவாச ஜெபம், வீட்டுக்கூட்டம் ஆகியவை தொடர்ந்து நடைபெற, புதிய ஜெபக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட ஜெபிப்போம்.

**வளரும் விண்ணரசுவுக்கு சந்தா செலுத்தி, பத்திரிக்கை ஊழியம் சிறக்க உதவுங்கள்.**

# பர்த்தலோமேயு சீகன்பால்க்

அறிவு

(1682- 1719)

ஜெர்மனி நாட்டில் 1682ஆம் ஆண்டு பிறந்தவர் பர்த்தலோமேயு சீகன்பால்க். இளமையிலேயே தன் பெற்றோரை இழந்தவர். புகழ் பெற்ற ஹாலே பல்கலைக் கழகத்தில் இறையியல் படித்துக் கொண்டிருக்கையில், அவருக்கும், அவருடைய நண்பர் ஹெயின்ரிச் புளுட்சோ என்பவருக்கும், டென்மார்க் அரசர் நான்காம் பிரடரிக் மூலம் அழைப்பு வந்தது.



அந்த அரசருக்கு அருட்பணியாளர்களை இந்தியாவுக்கு அனுப்ப வேண்டும் என்னும் விருப்பம் இருந்தது. அவருடைய தூண்டுதலாலும், ஆண்டவரின் வழி நடத்துதலாலும், இந்த இருவரும் 1705ஆம் ஆண்டு, நவம்பரில் கப்பல் ஏறி 1706 ஜுலை மாதம் (ஏறத்தாள 9 மாதங்கள் பயணம் செய்து) தரங்கம்பாடி வந்து இறங்கினர்.

அப்போது சீகன்பால்க்கின் வயது 24. இந்தியா வந்த முதல் புராட்ட்ஸ்டண்ட் மிஷனரிகள் இவர்களே. சில ஆண்டுகளே இருந்த புளுட்சோ மீண்டும் ஜெர்மனிக்குத் திரும்பினார். ஆனால், சீகன்பால்க் தன் அருட்பணியைத் தொடர்ந்தார்.

விரைவில் தமிழ் மொழியைக்கற்றுக் கொண்ட சீகன்பால்க், வேதபுத்தகத்தைத் தமிழில் மொழிபெயர்க்கும் மாபெரும் பணியைத் தொடங்கினார். புதிய ஏற்பாட்டை ஐந்தே ஆண்டுகளில் முடித்து, இந்தியாவிலேயே முதன்முறையாக (ஆசியாவிலேயே என்றும் சிலர் கூறுவர்) தமிழ் மொழியில் வேதாகமத்தை அச்சிட்டு வெளியிட்டார். ஜெர்மனியிலிருந்து அவரது முயற்சியால் வந்த அச்சடிக்கும் கருவிகள் அதற்கு உதவின.

குறைந்த ஆண்டுகளில் நிறைந்த பணி செய்தவர், தனது ஆண்டவராம் இயேசுவைப் போல வாழ்ந்தவர் சீகன்பால்க். கீழ்க்கண்ட பல வகையான பணிகளைச் செய்தவர் அவர்:

- ஆண்களுக்கும், பெண்களுக்கும் கல்வியளிக்கும் பள்ளிகளை நிறுவினார்.
- கிருஸ்தவ தலைவர்களை உருவாக்கும் இறையியல் கல்லூரி தொடங்கினார்.
- அனாதைக் குழந்தைகளுக்கு ஓர் இல்லம் அமைத்தார்.
- ஏழைகள், விதவைகள், முந்தைய அடிமைகளுக்கு இலவச உணவு அளித்தார்.
- காகித தொழிற்சாலை ஒன்று அமைத்தார்.
- அச்சுத்தொழிலை இந்தியாவுக்கு அறிமுகம் செய்தார்.
- முதல் முதலாக ஓர் இந்திய சபை உருவாக்கினார்.
- புதிய எருசலேம் ஆலயக்கட்டடம் கட்டினார்.
- ஜெர்மன் மக்கள் தமிழ் கற்றுக்கொள்ளும் வகையில் "தமிழ் இலக்கணம்" என்ற நூலை இயற்றினார்.
- பல நூல்களைத் தமிழிலும், ஜெர்மனியிலும் எழுதி வெளியிட்டார்.

13 ஆண்டுகளே அவர் ஆண்டவருக்காக பணிபுரிந்து, தன் 37ஆவது வயதில் தரங்கம்பாடியில் மறைந்தார். அவருடைய உடல், அவர் கட்டிய "புதிய எருசலேம் ஆலயத்திலேயே" அடக்கம் செய்யப்பட்டது.

பல்வேறு தொல்லைகள், துன்பங்களின் நடுவிலே சோர்வடையாமல் ஊழியம் செய்த அருட்பணியாளர் பர்த்தலோமேயு சீகன்பால்க்கை நாம் மறக்கவே முடியாது.

➪➪➪

# வட இந்தியா

## மேற்கத்திய கோண்டுகள் சத்தீஸ்கர் மாநிலம்

அக்டோபர்-18 **வட இந்தியா**

**அருட்பணியாளர்கள்:**

**திரு. லல்துராம் சலாம்.**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பாலர்மேடா, கோர்காவ், முல்லே, தெலன்கா, போல்பா, கானாகாவ், மாட்டலா ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட மணிராம் பொட்டாய், காஸ்னு காவ்டே, ராஜேஸ்வரி சோதி, மணிராம் சோதி ஆகியோருக்காக, மணிராம் பொட்டாய், கேஸ்சுனு காவ்டே ஆகியோர் மனநோயிலிருந்து சுகம் பெற்றதற்காக, ராஜேஸ்வரிக்கு அறுவைச்சிகிச்சை நல்லமுறையில் நடைபெற்றதற்காகத் துதிப்போம். லக்மு காவ்டே தோள்பட்டை வலியிலிருந்து சுகம் பெற, புதிதாக நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. ராம்பொரஸ் போயாம்**
**திருமதி. சங்கீதா போயாம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கொங்கேரா, பூஜாவாகி, மலேச்சூர் ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். சுமத்திராவுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, பஜய்க்கு சுகப்பிரசவம் கிடைக்க, சுக்ஜான் மனநோயிலிருந்து சுகம் பெற, ராஜவூவ் பக்கவாதத்திலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சந்து சலாம்**
**திருமதி. சோன்பத்தி சலாம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட போர்காவ், குருஸ்நார், படே ஜம்ரி ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட மன்து, சங்கர், சுர்சு ஆகியோருக்காக, மெகேத்திரினுக்கு அறுவைச்சிகிச்சை நல்லமுறையில் நடைபெற்றதற்காக, இமேல் சிறுநீரக நோயிலிருந்து சுகம் பெற்றதற்காக, தர்ஷனாவிற்கு கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். மனைவியை இழந்துள்ள கடேசுக்கு தேவன் ஆறுதல் தர, ராம்லால் விசுவாசத்தில் வளர, பில்லுவுக்கு சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. மங்கலு மாத்லாம்**
**திருமதி. சுசீலா மாத்லாம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பாட்பால், ஷியாநார், பூசுவால் ஆகிய கிராமங்களுக்காக, அத்லு, மங்னி ஆகியோர் புதிதாக ஆராதனையில் கலந்து கொள்வதற்காக, ஹரிஸ் கண் நோயிலிருந்து சுகம் பெற்றதற்காக, சோனா சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். பன்சி, ஆயத்து ஆகியோர் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற, மானக் (சர்க்கரை நோய்), வைபவ் (மூச்சுத் திணறல்) ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. கஸியா துக்கா**
அக்டோபர்-19 **திருமதி. ரூப்பாய் துக்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஜாக்ரி, அமாஸாரா, கோகுடா, மிஸ்ரி, போங்காபால், ஆத்வால் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட நய்மதி மண்டாவி, சனோன்தி போயம், ஜெய்மதி துக்கா, ராஜேஸ்வரி சோரி, பூலோ சலாம், மணிராம், ரிமோதி துக்கா, பூல்தாய் மண்டாவி ஆகியோருக்காக, ஆஸா மஸ்காஸ், சுக்தாய் பொட்டாய் ஆகியோர் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். ராஜேஸ்வரி சோரி (மூச்சுத் திணறல்), இஸ்ரேயல் (நிமோனியா) ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சாது துக்கா**
**திருமதி. ரசாய் துக்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஆம்காவ், சிப்ரேல், மஸ்பூர், தெர்தூல், தாடோநார், தாடோபால் ஆகிய கிராமங்களுக்காக, சுக்கோவிற்கு கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். சுக்காயி துக்காவிற்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, ரஜ்னி துக்காவிற்கு சுகப்பிரசவம் கிடைக்க, மங்னேக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. புத்சிங் வட்டே**
**திருமதி. ரெய்னி வட்டே**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஓங்நார், மட்டாவண்ட், மாத்லா, ஏதேம்பால் ஆகிய

கிராமங்களுக்காக, சுக்ரு பொட்டாய், சுக்காய், பாண்ட்ரி ஆகியோர் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். சுகோந்தி (நரம்பு நோய்), பாடுக்கி (சர்க்கரை நோய்) ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. ஜ<sup></sup>குல் சலாம்**
**திருமதி. சொனாரி சலாம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சாந்தாகாவ், சோனாபால், பாக்பேடா, கிதும்பேடா, சிர்பூர் ஆகிய கிராமங்களுக்காக, சீதா வட்டே நெஞ்சு வலியிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். சுக்மதி பொட்டாய் (தலை சுற்றல்), சோனோத்தி சலாம் (நுரையீரல் நோய்), ரீத்தா வட்டே (கர்ப்பப்பை நோய்) ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. தஸ்ரு பொட்டாய்**
**அக்டோபர்-20**
**திருமதி. ஜெய்மதி பொட்டாய்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பாவ்டி, கோட்லி, பூஜாவாகி ஆகிய கிராமங்களுக்காக, கோலே உய்கே மலேரியாவிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். சைத்தே சலாம் (வயிற்று வலி), பூல்பதி ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: செல்வி. கசினி துக்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மொடேங்கா, பல்னா, சிங்னார், பலோடா பூட்டான் சாந்தாகாவ், உடித்காவ் ஆகிய கிராமங்களுக்காக, டூலுவுக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக, சுனில், ஷியாராம் ஆகியோர் ஆராதனையில் கலந்து கொள்வதற்காகத் துதிப்போம். சுன்கி பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற, கோர்சு, சேத்ராம், லட்சு, சன்தி, அனித்தா ஆகியோர் இரட்சிக்கப்பட, ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு.தேசிராம் வட்டே**
**திருமதி. ரானோ வட்டே**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட காராவாண்ட், மூஞ்மெட்டா, சிவ்னி, திம்நார், பல்போட்பாரா, ஜோட்டா பாரா ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். ராம்தாய் வட்டே, மண்தேர் வட்டே ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, மங்கள்தாய்க்கு ஏற்ற வாழ்க்கைத்துணை கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. ஜக்நாத்குமிட்டி**
**திருமதி. சுக்கோ குமிட்டி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பிடுகாபேடா, பரண்டா, கேராபட், ஜோட்டே, ஜெய்பூரி ஆகிய கிராமங்களுக்காக, சாமுவேல் குமிட்டிக்கு கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். மைமேஷ் நுரெட்டி, ரேஷ்மா கருங்காவின் குழந்தை, சுக்ரி குமிட்டி, சம்ரே ஆகியோர் நிறைவான சுகம் பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு.லட்சு கருங்கா**
**அக்டோபர்-21**
**திருமதி. புல்தாய் கருங்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட போர்பால், கட்காகாவ், கொர்ரா, இருக்கோ, சீண்டுபாரா, ஈத்கஜா ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட கரினாவுக்காகத் துதிப்போம். தினேஷ் உசேன்டி, பஜோனி ஆகியோர் இரட்சிக்கப்பட, மனாரே வட்டே, கரீனா ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, சனோத்திக்கு சுகப்பிரசவம் கிடைக்க, அமாய்க்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சன்னு துக்கா**
**திருமதி. மனிஷா துக்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மார்க்கபேடா, மூங்மேடா, காப்சி, மாலிங்நார் ஆகிய கிராமங்களுக்காக, சோமனி, மங்கோத்தி ஆகியோர் புதிதாக ஆராதனையில் கலந்து கொள்வதற்காக, ஊழியர் விபத்திலிருந்து பாதுகாக்கப் பட்டதற்காகத் துதிப்போம். சோமனி இரட்சிக்கப்பட, விசுவாசிகள் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**செல்வி. ராம்தாய் குமிட்டி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மட்டாவாண்ட், நாராயண்பூர், கொர்ரா ஆகிய கிராமங்களுக்காக, ஷீமா துக்கா, மான்கி, லெட்சுமண் குமிட்டி ஆகியோர் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். ப்ரீஜ்பதி குமிட்டி, சுனித்தா துக்கா, சதாய் சலாம் ஆகியோருக்கு சுகப்பிரசவம் கிடைக்க, ஆலயம் கட்டுவதற்குத் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**செல்வி. கோத்தாய் பொட்டாய்**
**செல்வி. பஜாரி கருங்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட வேத்மாகோட், மண்டோகி, மொரஸ்கோடா, பரஸ்காவ் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட ஜெய்லால், அஜித், துஸ்ரி, லசந்தி, நீரஜ் ஆகியோருக்காக, லசந்தி, நீரஜ் ஆகியோர் புதிதாக ஆராதனையில் கலந்து கொள்வதற்காகத் துதிப்போம். லக்மு (மனநோய்), சுமித்ரா, சுக்லி, முங்காய் ஆகியோர் நிறைவான சுகம் பெற, சுகுல், சுக்கோன், அர்ஜுன் ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. பஜ்நாத் சலாம்**
**திருமதி. சொனாரி சலாம்**

**அக்டோபர்-22**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட குட்ரபாரா, ரேமாவாண்ட், பாத்ரூடண்ட் பாரா, பாத்ரூடண்ட் பாரா, சாந்தி நகர் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட மான்கு, இத்வாரி ஆகியோருக்காக, பத்ரூ, ரூத்து ஆகியோருக்கு கிடைத்த சுகத்திற்காக, குமார்—ஈஸா தம்பதியினர் மீண்டும் சேர்ந்து வாழ்வதற்காகத் துதிப்போம். சந்தோஷிக்கு சுகப்பிரசவம் கிடைக்க, சுக்தாயிக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திருமதி. தன்பத்தி பொட்டாய்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கோகுடா, ரேமாவண்ட், நயானார் ஆகிய கிராமங்களுக்காக, சுக்மன் வட்டேக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக, சுகோந்தி மீண்டும் ஆராதனையில் கலந்து கொள்வதற்காகத் துதிப்போம். மங்காவூ வட்டே இரட்சிக்கப்பட, ஷப்னா நல்லமுறையில் படிக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சொகாய் கருங்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட தேவ்காவ், கொகுடா, கோடுகாவ், பிரள்பட் ஆகிய கிராமங்களுக்காக, சுரேஷ் உய்கேவிற்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக, ரம்யா, டேவிட், தீபிகா, விகேஷ், அஞ்சு, ஜுகுல் ஆகியோருக்குக் கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். ராஜ்பத்தி மண்டாவி, சமீதாய் ஆகியோர் இரட்சிக்கப்பட, பிரதம் (மலேரியா), பார்வதி (இரத்த அழுத்தம்), சுகாய் ஆகியோருக்கு சுகம் கிடைக்க, சுக்ராம், சுனாய் ஆகியோர் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. லால்சாய் பொட்டாய்**
**திருமதி. சீத்தா பொட்டாய்**

நற்செய்தி அறிக்கப்பட்ட கோங்லா, ஸாரா, முஸ்குடும், முண்டுபால் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட லக்மு, லக்மா, பால்சாய், சுக்தேவ், சந்தோ், சாம்லால், பீலு ஆகியோருக்காக, மெனிபாய், சம்ரா ஆகியோருக்கு கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். சுசீலாவுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, மால்மத்திக்கு சுகம் கிடைக்க, சிர்கோ பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. மான்சிங் கச்லாம்**
**திருமதி. சுல்மதி கச்லாம்**

**அக்டோபர்-23**

நற்செய்தி அறிக்கப்பட்ட கோங்லா, ஸாரா, முஸ்குடும், முண்டுபால், மட்மனார் ஆகிய கிராமங்களுக்காக, சோகன், புத்சிங், பியா ஆகியோருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காகத் துதிப்போம். ஸாரா இரட்சிக்கப்பட, சோனாரிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சந்துராம் வட்டே**
**திருமதி. சுகோந்தின்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கங்கால், கர்மாரி, தாடோநார் ஆகிய பகுதிகளுக்காகத் துதிப்போம். ஜம்தேர் கோட்டாவிற்கு சுகப்பிரசவம் கிடைக்க, சுப்ரீத் வட்டேவிற்கு நல்லமுறையில் அறுவைச்சிகிச்சை செய்யப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சுக்தேவ் குமிட்டி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கோர்நர், தெலங்கா ஆகிய பகுதிகளுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட மணிராம் சோட்டி, ராஜேஸ்வரி சோட்டி, குஷ்னுராம் காவ்டே, மணிராம் பொட்டாய் ஆகியோருக்காக, துலுராம் துக்கா பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றதற்காகத் துதிப்போம். லக்முராம் காவ்டே புற்று நோயிலிருந்து சுகம் பெற,

வெர்த்நார், கோட்கோடோ, மாத்லா, காலைநார், கோடுர்சாகி ஆகிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க திறந்த வாசல் கிடைக்க ஜெபிப்போம்.

**ஜார்கண்ட் மாநிலம்**

**அருட்பணியாளர்: திரு. குந்தர் பகெல்**
**திருமதி. மம்தா பகெல்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மாங்கை, நாக்ரா, ராமானுகஞ்ச், காஜிரி, டாடாபானி ஆகிய கிராமங்களுக்காக, ராமானுகஞ்ச், கோர்பா, டாடாபானி, பாண்ட்ரிய்யா, மாகுவாடி நகர் ஆகிய இடங்களில் ஜெபக்குழுக்கள் நடைபெறுவதற்காக, கிருஷ்ணன் இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காக, மெய்னாதேவி சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். ரெஷ்மா, விகாஷ், யசோதா, சுபோசினி, பர்மிளா, சீதா, சுனோஷ் ஆகியோர் விசுவாசத்தில் வளர, ஆலயக்கட்டுமானத் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. மங்கள் மராண்டி**
**(அக்டோபர்-24) திருமதி. சுகாஜினி சௌரேன்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ராம்பூர், குஸ்சிரா, கேட்பாந்தா ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட வினோத் முர்மு, பிரான்சிஸ் முர்மு, ராம்ஷில் முர்மு, பிலிப் முர்மு ஆகியோருக்காக, பாபூராம், ஜோகேஷ் சௌரேன், சோம் கெம்ப்ரோம் ஆகியோர் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். ராம்கந்த்ரா, லோகிராம் முர்மு, கேப்னா கேம்ப்ரோம், ராம் சிஸ்ரு ஆகியோர் இரட்சிக்கப்பட, நிகாய் கேம்ப்ரோமுக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**உத்தரப்பிரதேசம்**

**(அவாதி, மிஸ்ரா, ராஜ்புத், கௌதம், தாக்கூர், சௌகான், சௌத்ரி–ஆகிய மக்கள் கூட்டத்தினர்)**

**அருட்பணியாளர்: திரு. ராம்ஜியவான்**
**திருமதி. ராஜ்லட்சுமி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பிஸ்வா, இஸ்பாபூர், மதன்பூர், மெய்பத்பூர், சரெய்யா, மூரத்பூர், ஜம்பா, பூடான்பூர், பிஜென்டா, படாய்பூர், கங்காபூர், மடியாவா, ஜான்பூர், கினோத்தி ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட சிவம், ஷீமா, பிரகாஷ், ரவீ, அன்குல், திலோக்கி, சுமன்தேவி, ரேகா, சஞ்சய்குமார், ரேணு, பிரியாதேவி, ராஜா, சாந்தி, ரூபாதேவி, ஜியாமோ, ராமு, சம்பத், கீராலால், ரோகித், பப்லி, ஆனந்த், ஜோட்டு, திபேந்தர், சருப்ஜே, சோப்ரன், ஆமோஸ், பிரதீப், ரேகா, ராதா, பப்பி தேவி ஆகியோருக்காக, அணில், கான்ஷியாம், ராஜ்ராணி, ஆசிஷ், பூல்மதி, ஆதிபின் மூர்த்தி ஆகியோருக்குக் கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். சதீஷ் (சிறுநீரகக்கல் அடைப்பு), மகேந்திரன் (மஞ்சள் காமாலை), சோனு (இருதய நோய்), நீலம் (இரத்த சோகை), சாந்தி (தோல் நோய்), டிகானா (மூல நோய்), ஜிதேந்தர் (நுரையீரல் நோய்), சருப்பே (கல்லீரல் நோய்) ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. மிதிலேஷ்குமார்**
**திருமதி. சுனித்தா தேவி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பக்கரியாஹர், மூடா, சுத்தரி, குச்சல்ஹா, ஹரெய்யா, லங்கடிபூர், ஹசரியா, கோலா, காவேல்பூர், மாட்டாபூர்வா, மஜ்ரா, சிரெய்ஜா, சுர்ஜி பூர்வா, கூஷ்மௌரி, திங்கூர் பூர்வா, மாணிக்பூர் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட குட்டி தேவி, அனுராக், ஜூலி, அஞ்சலி, ஆதித்ய, சாவித்திரி, சந்திரா, ராம்சேவக், ராஜீ, ஷீமா, ரோஸன்லால், கீதா, நீரஜ், ராஜ்குமார், சுராமதி, சாலினி, கிரண், கீர்த்தி, அசின், ரோகினி, ராஜ்குமாரி, ராம்பால், சர்வன், விஜராணி, ரீதா, சுனித்தா, ரேஷ்மா, அசோக், பூல்மதி, ரேகா, அஜ்மோர், அமன், அஜிகா, பான்சு, மீரா ஆகியோருக்காக, சத்யா தேவி, பூஜ்வதி ஆகியோருக்கு சுகம் கிடைத்ததற்காக, கமிநிகுனுவுக்கு குழந்தை பாக்கியம் கிடைத்ததற்காகத் துதிப்போம். குட்டி தேவி (முகப்புற்று நோய்) நிறைவான சுகம் பெற, கர்தேவசாய் இரட்சிக்கப்பட, சத்தியாதேவிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

**ஆந்திரா மாநிலம் (தென்னிந்தியா)**

**அருட்பணியாளர்:** **(அக்டோபர்-25)**
**திரு. வெங்கடேஸ்வரலு**
**திருமதி. கடம் புஷ்பம் குமாரி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட டொட்லவாரமிட்டா, நாயுடுபேட்டா,

கானூரு ஆகிய கிராமங்களுக்காக, முப்பதுக்கும் மேற்பட்ட கிராமங்களில் குழுவாக சேர்ந்து செய்யப்பட்ட கிராம ஊழியத்திற்காக, கானூரு திருச்சபையில் வைத்து நடைபெற்ற ஒரு நாள் சிறப்பு கூடுகைக்காகத் துதிப்போம். நாயுடுபேட்டா திருச்சபைக்கு தேவையான இடம் மற்றும் திருச்சபை கட்டுமான தேவைகள் சந்திக்கப்பட, ஆரளப்பாடு மற்றும் பங்காரபேட்டா ஆகிய பகுதிகளில் நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட, ஜெசி, மனம்மா ஆகியோர் நிறைவான சுகம் பெற, சிரவானி குடும்பமாக விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. பால் வீரமணி**
**திருமதி. பெல்சியா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கானூரு சென்டர், செங்காரெட்டி கன்ரிகா, பூபாய் காலனி, நாயுடுபேட்டா ஆகிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக, நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஆரளப்பாடு, பங்காரபேட்டா, அர்த்தமாலா, திகுசவாலி, செல்லகூரு ஆகிய கிராமங்களுக்காக, தெலுங்கு மொழியை கற்றுக்கொள்ள, ஆண்டவருடைய வார்த்தையை பகிர்ந்துகொள்ளவும் கர்த்தர்கொடுத்த கிருபைகளுக்காகத் துதிப்போம். "ஏனாதி"மக்களை சந்திக்க புதிய வாய்ப்புகள் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. உதய்குமார்**
**திருமதி. பிரசன்னா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட வெங்கடரெட்டி காலனி, சிந்தாரெட்டிபாளையம் ஆகிய கிராமங்களுக்காக, ஊழியரின் தந்தைக்கு கிடைத்து வரும் சுகத்திற்காகத் துதிப்போம். சபைக்கு அடிப்படை தேவையான கழிப்பறை கட்டப்பட, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அக்டோபர்-26**

**அருட்பணியாளர்:**

**திரு. பத்தலா மதுசுதாகர்**

நற்செய்திப் பணி செய்யப்பட்ட பெரிமிடி, துவாரகாபுரம் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட தசரதன், காமாட்சி, சந்திரையா, அமராவதி, நந்தினி, அகிலா, ஜெயராமையா ஆகியோருக்காகத் துதிப்போம். கங்கம்மா பக்கவாத நோயிலிருந்து சுகம் பெற, பெரிமிடி கிராம மக்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**கர்நாடக மாநிலம் - தேவனஹள்ளி(தென்னிந்தியா)**

**அருட்பணியாளர்:**

**திரு. சாமுவேல் பிரபாகர்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட வெங்கடப்பூர், தர்பனஹள்ளி, ஹோட்டேஹள்ளி ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி அறிவிக்கப்பட்ட இராஜீவ் நகருக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட முனிராஜா குடும்பம், பிரசாத் குடும்பம் ஆகியோருக்காகத் துதிப்போம். முனிராஜா குடும்பம், பிரசாத் குடும்பம் ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**ஓடிசா**

**அருட்பணியாளர்: திரு. டேனியல் சாந்தா**
**திருமதி. புலிமி சாந்தா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட குமுடகுடா, பாலிதிஷ் படோர், பாதாபடோர் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட ரீத்தா, ஜோசப், சொய்ராமோ, குண்ட்ரூ, நெல்சோ, மானிக் ஆகியோருக்காக, கரன் தாக்கரே, ரிகான் ஆகியோருக்குக் கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். ஊழியத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் ஜம்பூரி, ராமோ, சோனாயே, நாடோ, துப்லி, தியானா, பாலை ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அக்டோபர்-27**

**அருட்பணியாளர்:**

**திரு. அப்பொல் மண்டல்**
**திருமதி. சுமித்ரா மண்டல்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சிலிடோங்கிரி, கோன்ஷாப் பாரா, துமர்திகி, பரசுண்டி, தொட்ரபாரா ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட ஜெய்த்மோன், சந்தோஷி, பூர்னோ, ரத்தினி, ஜெய்த்தி, ஜகநாத், கைலாஷ், லால்சாய், வனித்தா, மோகன், சுக்மோன், பார்வதி, பிதோந்தி, துக்கோ, சந்தோஷ், ரவீ, விமல், ஆர்த்தி ஆகியோருக்காக, ரஷ்மி குடும்பம் புதிதாக ஆராதனையில் கலந்து கொண்டதற்காக, வீணாவுக்கு தலையிலுள்ள கட்டி அறுவைச்சிகிச்சை மூலம் அகற்றப்பட்டதற்காகத் துதிப்போம். பிங்கி குடும்பம், சந்தோஷி ஆகியோர் இரட்சிக்கப்பட, ஜெய்த்மோன், புருனோ, ருமோத்தி, அம்ருத்தி, சாந்தி ஆகியோர் விசுவாசத்தில் பெலப்பட, வீணாவின் பொருளாதாரத் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திருமதி. ஜானகி மாஜி**
**திரு. லெலன்–திருமதி.பிரிட்டி லெலன்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சிமிலி குடா, பாப்லி, கபித்தா, நாகூல், மான்பார், குமரகுடா, பானுவா குடா ஆகிய கிராமங்களுக்காக, அஞ்சனா நற்செய்திக்கு ஆர்வம் காட்டுவதற்காக, கோபால் குடிப் பழக்கத்திலிருந்து விடுதலை பெற்றதற்காகத் துதிப்போம். மாதுகரிசன், அர்சுன் ஆகியோர் இரட்சிக்கப்பட, சுமித்ராவுக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

### குக்கி அருட்பணியாளர்கள் (வடகிழக்கு மாநிலங்கள்)

**அருட்பணியாளர்: திரு. நபின் நர்ஜினரி (அருணாச்சல பிரதேசம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அலுபாரி, சிவாஜி நகர், லோஹித்பூர், பயா, மேகய்லியங், கோரலியங், டாப்ரஹான், தெல்லுலியங், பயன், 20ஆவது மைல் ஆகிய பகுதிகளுக்காக, ரவி லால் சௌத்திரி இயேசுவை ஏற்றுக் கொண்டு, திருமுழுக்குப் பெற்றதற்காக, பிரேமா நோர்பு பொய்பா மனநோயிலிருந்து சுகம் பெற்று வருவதற்காகத் துதிப்போம். கிரேஸி லெப்சா, ரிட்டா பரிஹர், தெபோரா கிம்ஹொய்நெம் ஆகியோர் சுகம் பெற ஜெபிப்போம்.

**அக்டோபர்-28**

**அருட்பணியாளர்:**
**திரு. தங்காலுன் கிப்கின் (அஸ்ஸாம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ருகாசன், மோலன், அமராஞ்சன், வோம்லி, ஜவ்ஜங், எக்ரானி, ஷுகஞ்சன் ஆகிய பகுதிகளுக்காகத் துதிப்போம். பல்வேறு கொள்கைக் குழப்பங்கள் நிறைந்த இடத்தில் விசுவாசிகள் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. ஆபிரகாம் தௌதாங் (மேற்கு வங்கம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட தெபித்ங்கா, பாபுபாஷா, சில்வர் டேல், சிஆர்பிஎப் குடியிருப்பு, சிவ்மந்திர் ஆகிய பகுதிகளுக்காக, வீட்டுக்கூட்டம், உபவாசக்கூட்டம் ஆகியவை நடைபெறுவதற்காக, விடுதி மாணவர்களின் பெற்றோர் ஆராதனையில் கலந்து கொள்ள ஆரம்பித்ததற்காகத் துதிப்போம். டேனியல், நிடாராணி குருங் ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. ஹெம்ஹோசன் ஹோகிப் (அருணாச்சல பிரதேசம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பெகுலியங், கெப்ருலியங், ஹடிதுபா, யய்லிங் ஆகிய பகுதிகளுக்காக, தமாய், சிக்ரோ ஆகியோர் சுகம் பெற்றதற்காக, பஜன்சி இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அக்டோபர்-29**

**அருட்பணியாளர்:**
**திரு. இங்காம்போ ஹோகிப் (அஸ்ஸாம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அம்ரஜன், கர்பி, ஆங்லாங் ஆகிய பகுதிகளுக்காக, உபவாச ஜெபம், குடும்பக்கூட்டம் ஆகியவை நடைபெற்றதற்காக, குக்கி, கர்பி, கச்சாரி ஆகிய இனக்குழுக்கள் நடுவில் நற்செய்தி அறிவிக்கும் பணி நடைபெற்றதற்காகத் துதிப்போம். பள்ளி நிர்வாகம் நல்லமுறையில் நடைபெற, மாணவர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள் ஆகியோரின் பாதுகாப்புக்காக, ஆசிரியர்கள் சிறப்பான முறையில் கற்றுக்

கொடுக்க, ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஊழியர்கள் ஒருமனதோடு செயல்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. செய்கோதாங் ஹோகிப் (சிக்கிம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சோம், மேல் மாங்மோ, டென்டம் மருத்துவமனை ஆகிய பகுதிகளுக்காக, புதங் சுப்பா இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அக்டோபர்-30**

**அருட்பணியாளர்:**

**திரு. சத்யாபாஸி மோல்சம் (திரிபுரா)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட எம்புருட் சேரா, கமலா சேரா, மேகஸின், ஹவாய்பாரி ஆகிய பகுதிகளுக்காக, உபவாச ஜெபம், குடும்பக் கூட்டம், தம்பதியர் ஆலோசனை ஆகியவை நடைபெற்றதற்காகத் துதிப்போம். ரேஷ்மிகா குடும்பம் நிறைவான சுகம் பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. செய்கோலன் குய்டி (திரிபுரா)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட நெய்லஹா, டான்சாரா, எம்புருட் சேரா, பங்க்ஜங்க், கெய்கன், ஜாவ்காவ், லாங்ஜோல், முன்பி ஆகிய பகுதிகளுக்காகத் துதிப்போம். குடும்பக்கூடுகை, ஜெபக்கூடுகை, மாலை நேர வகுப்பு ஆகியவை தொடர்ந்து நடைபெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. லென்ஹோகோ ஹோகிப் (திரிபுரா)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஜாவ்ல்காவ், ஸ்ரீலங்கா, சால்டாசெரா, எம்புருட் சேரா, டான்சாரா ஆகிய பகுதிகளுக்காக, நிர்ஜரா மோல்சம் சுகம் பெற்று வருவதற்காக, எம்புருட் சேரா விடுதி கட்டமானப்பணி நிறைவு பெற்றதற்காகத் துதிப்போம். வேதபாட வகுப்பு, மாலை நேர வகுப்பு, ஜெபக்கூடுகை ஆகியவை தொடர்ந்து நடைபெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. செய்மிங்தங் கிப்கின் (மணிப்பூர்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கேம்ங்காய், காங்குய், கேமிங்பாய், ஹோலப், பைஜிங், மோங்தங், கங்க்போக்பி, ஹோலிஜங் ஆகிய பகுதிகளுக்காகத் துதிப்போம். மணிப்பூர் அகதிகள் முகாமிலுள்ளவர்கள் மீண்டும் தங்கள் வீடுகளுக்குத் திரும்ப ஜெபிப்போம்.

**அக்டோபர்-31**

**அருட்பணியாளர்:**

**திரு. ஸ்டீபன் லுங்கோஜின் (சிக்கிம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மார்டம், மேற்கு சிக்கிம் ஆகிய பகுதிகளுக்காக, ஊழியரின் தேவைகள் சந்திக்கப்பட்டதற்காக, ஊழியரின் மனைவிக்கு குழந்தை பாக்கியம் கிடைத்ததற்காக, ஊழியரின் தந்தைக்கு அறுவைச் சிகிச்சை நல்லமுறையில் நடைபெற்றதற்காக, பெர்மன் நற்செய்தி கேட்டதற்காகத் துதிப்போம். குக்கி, மார்தம் இன மக்களில் நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**செல்வி. லிங்னெய்கிம் (அருணாச்சல பிரதேசம்)**

பூனம் கர்பி புதிதாக இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காக, மாணவர் ஐக்கியம், வேதபாட வகுப்பு, ஆங்கில ஆராதனை ஆகியவை நடைபெறுவதற்காகத் துதிப்போம். விடுதி காப்பாளருக்கு வீடு கட்டப்பட, மாணவர் விடுதி விரிவாக்கம் செய்யப்பட, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. ஹோலன்லால் கிப்கின் (அருணாச்சல பிரதேசம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட நியூ மேகலியங், சிவாஜி நகர், ஜெலக் பாரி, பயஹாம், தங்லத், ஹஜுஹாம் ஆகிய பகுதிகளுக்காக, நிர்வாக பயிற்சி வகுப்பு சிறப்பாக நடைபெற்றதற்காகத் துதிப்போம். பசிலு சிபாவின் கணவர் மீண்டும் அவரோடு இணைந்து வாழ, அர்ஜுன் லிம்புவை இழந்த குடும்பத்தாருக்கு தேவன் ஆறுதல் தர, ஹெகெலம் டாஞ்சி போதைப் பழக்கத்திலிருந்து விடுதலை பெற, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.




# இழப்பு இறுதியல்ல.

திருமதி. ரேணுகா பிரின்ஸ்

நாம் வாழ்க்கையில் சந்திக்கும் துயரங்கள், இழப்புகள் மற்றும் சவால்கள் ஆகியவை நம்மை புதைக்க அல்ல. மாறாக ஒரு புதிய விதை முளைப்பதைப் போன்ற ஆரம்பத்திற்காகவே என்றால், அது மிகையல்ல.



**வேதாகமத்தில் பெண்களின் சாட்சி**: யூதர்கள் மற்றும் சமாரியர்களால் வெறுத்துத் தள்ளப்பட்ட சமாரியப் பெண் (யோவான் 4:6-42) இயேசுவை சந்தித்தாள்-மாற்றம் பெற்றாள். அதன்பின்பு, முழு கிராமமும் இயேசுவைத் தேடி வருவதற்கு ஒரு பாலமாக மாறினாள்.

**தெபோராள்**: (நியாயாதிபதிகள் 4-5) விசுவாசத்தில் நிலைத்திருந்த ஒரு பெண், தாயாகி, தேவனுடைய ஜனங்களை எதிரிகளின் கைகளிலிருந்து காப்பாற்றினாள். இப்படிப்பட்ட சாட்சி தனிப்பட்ட அளவில் மட்டுமல்லாமல் ஒரு தேசத்தையே மாற்றக்கூடிய ஆற்றல் கொண்டது.

**வரலாற்றில் ஒரு சிறந்த உதாரணம்**: அன்னா ஸ்பாஃபோர்டின் கணவர் ஹோரேஷியோ ஸ்பாஃபோர்டு ஒரு கிறிஸ்தவ வணிகர்-வழக்கறிஞர் ஆவார். 1873ஆம் ஆண்டில், அவர் தனது மனைவி மற்றும் 4 மகள்களை ஐரோப்பாவிற்கு அனுப்பினார். போகும் வழியில் அவர்கள் சென்ற கப்பல் கடலில் மூழ்கியது. இதில் அன்னாவின் கண்முன்னே அவரது 4 மகள்களும் உயிரிழந்தனர். அவர் மட்டும் உயிர் தப்பினார். அவர் ஒரே நேரத்தில் 4 பிள்ளைகளை இழந்த துயரம் மிகக் கொடியது.

ஆனால், அன்னா தன் விசுவாசத்தை விட்டுவிடாமல், ‘‘கடவுள் இன்னும் நல்லவர்’’ என்று சாட்சி கூறினார். அதற்குப்பின், ஸ்பாஃபோர்டு கடலில் பயணிக்கும் போது, தன் குழந்தைகள் மூழ்கிய இடத்தை நினைந்து, புகழ்பெற்ற கீர்த்தனையை எழுதினார்.



"என் ஆன்மா நலமாக இருக்கிறது. (It is well with my Soul). இந்தப்பாடலின் பின்னணியில், அன்னாவின் விசுவாசமும் உறுதியும் இருந்தது.

பலர், இதுபோன்ற சூழ்நிலையில் தேவனை மறுத்திருப்பார்கள் அல்லது கோபப்பட்டிருப்பார்கள். ஆனால், அன்னா தன் வாழ்வின் துயரத்தை தேவனுடைய கரத்தில் ஒப்படைத்தார். நம்முடைய துயரமும், கண்ணீரும் தேவனுடைய கைகளில் விழும்போது, அது புதிய விதையாக முளைத்து கடவுளின் விண்ணரசில் அசைவை உண்டு பண்ணுகிறது. 1881இல் அன்னா, ‘‘அமெரிக்கன் காலனி’’ என்னும் குழுவைத் தொடங்கி, சமூக சேவை மூலமாக தேவ அன்பை வெளிப்படுத்தினார்.

உலகின் பார்வையில் இழப்பு என்பது இறுதியாகும், ஆனால், விசுவாசத்தின் பார்வையில் இறுதியல்ல அது புதிய ஆரம்பம் என்பதை, அன்னாவின் வாழ்க்கை பறைசாற்றிக் கொண்டிருக்கின்றது. *****



# மாற்றம் பெற்ற இதயம்

அருள்திரு.G. பொன்னுராஜ்

அன்று இரவு உளுந்தூர் பேட்டையிலிருந்து கள்ளக்குறிச்சி செல்லும் பேருந்தில் ஏறி உட்கார்ந்த செல்வத்திற்கு மனம் இரணமாய் வலித்தது. தன்னுடைய ஒரே மகனுக்கு இந்த இளம் வயதில் இப்படிப்பட்ட ஒரு பயங்கரமான நோயா? தன்னால் நம்பவே முடியவில்லை என்பது மட்டுமே கவலையாயிருக்கவில்லை. மருத்துவர் தன்னுடைய மகனைக் குறித்துக் கூறியது இன்னும் கூடுதலாக துக்கத்தை வரவழைத்தது.

'செல்வம், உங்க மகனுடைய இதயம் மிக மோசமான நிலையிலிருக்கு. அதாவது, உங்க மகனுடைய இதயத்திலிருந்து சீழ் வடிந்து, அது விலா எலும்பில் வடியுது. இந்தப் படத்தை பாருங்கள்' என்று அந்தப்படத்தையும் மருத்துவர் காட்டினார். பார்த்தவருக்கு தலைசுற்றியது.

இப்படியெல்லாம் நடக்குமா? இதயத்திலிருந்து அன்பு புறப்படும்னு சொல்லுவாங்க, இது என்ன சீழ் புறப்பட்டு வழியுது என்ற சிந்தனையிலிருந்தவரிடம் மீண்டும் மருத்துவர் கூறினார். ஆகையினாலே, உங்க மகன் அதிகபட்சம் இன்னும் ஒரு மாதம் உயிரோடிருப்பதே அதிகம்தான். 'அதனால, உங்க மகன வீட்டுக்கு கூட்டிக்கிட்டு போங்க' என்றார்.

மருத்துவரின் இந்த வார்த்தைகள் காதில் ஈயத்தை காய்ச்சி ஊற்றியது போலிருந்தது. நினைவுகள் தீயாய் சுட்டன. பூத்தால் மலர்கள் உதிர்கின்றன. ஆனால், என் நெஞ்சில் நிரம்பி வழிகின்ற இந்த துக்கம் என்னை விட்டு உதிராதோ! என்று நினைத்தவாறு தூங்கிவிட்டார். அப்போது, ஒரு சத்தம் கேட்டது. செல்வம், எல்லோர்கிட்டயும் சொன்னியே, எங்கிட்ட சொன்னியா.

படக்கென்று விழித்துப் பார்த்தார். யாருமில்லை. சுற்றும் முற்றும் பார்த்தார். எல்லோரும் பேருந்தில் அசந்து தூங்கிக் கொண்டிருந்தார்கள். யாருமேயில்லயே, அப்ப யார் பேசியிருப்பா என்று நினைத்தவாறு மீண்டும் தூங்கிவிட்டார்.

இப்போது, மீண்டும் அதே குரல், செல்வம் எல்லோர்கிட்டயும் உன் மகன பத்தி சொன்னியே. ஆனா எங்கிட்ட நீ சொன்னியா. மீண்டும் விழித்துப் பார்த்தார். ஆனால், பேருந்திலுள்ள பயணிகள் அனைவரும் அசந்து தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

இப்போது ஒன்று புரிந்தது. இப்போது பேசியது என் ஆண்டவர் இயேசு கிறிஸ்துதான். இதுவரை எத்தனையோ பேரிடம் என் மகனுடைய நிலையைக் குறித்துப் பேசினேன். ஆனால், ஆண்டவரிடம் கூறவில்லையே. வீடு போய் சேர்ந்தவுடன் உடனடியாக உபவாச ஜெபம் பண்ண வேண்டும் என தீர்மானம் பண்ணினார்.

திட்டமிட்டவாறே, மூன்று நாட்கள் உபவாசித்து, தன்னுடைய மகனுக்காக மனதுருக ஜெபித்தார். மகனின் உடல்நிலை மோசமானதால், தன்னுடைய மைத்துனரோடு மகனை மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டு, உபவாச ஜெபத்தைத் தொடர்ந்தார். கடவுளோடு பேசியதில், நாட்கள் கரைந்தது தெரியவில்லை. மூன்றாம் நாள் உபவாச ஜெபத்தின்போது, தன்னிலை மறந்து தரிசனம் ஒன்று கண்டார்.

அவர் தங்கியிருந்த இடத்துக்கு,

வானத்திலிருந்து ஒரு மலர் வந்தது. வந்து சிறிது நேரத்தில் மலர்ந்தது. பார்ப்பதற்கு கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அப்போது, அலைபேசி ரிங்கிய சத்தத்தில் தரிசனம் கலைந்து அலைபேசியை எடுத்துப் பேசினார். எதிர்முனையில் அவரது மைத்துனர் பேசினார். மச்சான் உடனடியா மருத்துவமனைக்கு வாங்க, மாப்பிள்ளையோட நிலைமை ரொம்ப மோசமா இருக்கு, வெரசா வாங்க என்றார் பதட்டத்தோடு. என்னவோ, ஏதோவென நினைத்தவாறு உடனடியாக பேருந்தில் மகன் அனுமதிக்கப்பட்டிருந்த மருத்துவமனைக்கு விரைந்தார். போகிறவழியில் தான் கண்ட தரிசனத்தை நினைத்துப் பார்த்தார்.

வானத்திலிருந்து ஒரு மலர் வந்தது. வந்து அழகாக விரிந்தது. இது என்னவாக இருக்கும். அது சொல்லும் சேதி என்ன? என்ற எண்ணங்கள் அலைமோதின. அதற்குள் மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தார். அங்கே அவர் கண்ட காட்சி.

மருத்துவர் அவரது மகனை பரிசோதித்துக் கொண்டிருந்தார். மகனுடைய இதயப்படத்தையும், மகனையும், பின்பு தன்னையும் வித்தியாசமாக பார்த்துக் கொண்டிருந்த மருத்துவரை, ஒருவித பீதியுடன் கவனித்த செல்வம், மருத்துவரிடம், டாக்டர் என்னாச்சு எம் மகனுக்கு என்றார். மீண்டும் இதய படத்தையும், அவரது மகனையும், மீண்டும் தன்னையும் பார்த்த மருத்துவரை படபடக்கும் இதயத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார். என்னாச்சோ தெரியவில்லையே. மருத்துவரும் கூற மறுக்கின்றார். என்ன செய்வது என்று கையை பிசைந்து கொண்டிருந்தார்.

இப்போது, மருத்துவர் பேச ஆரம்பித்தார். செல்வம் உங்க மகனுக்கு இதய நோய் இல்லவே இல்லை. உங்க மகனோட இதயம் சிறு பிள்ளையின் இதயம் போல, சுறுசுறுப்பா இருக்கு. இனிமேல் எந்தப் பிரச்சனையும் இல்ல. உங்க மகன வீட்டுக்கு கூட்டிக்கிட்டு போங்க என்றார்.

செல்வத்திற்கு இப்போதுதான் போன உயிர் திரும்ப வந்தது போலிருந்தது. கடவுள் தன்னிடம் முறையிடவில்லையே என்றார். முறையிட்டபின்பு, ஒரு தரிசனத்தை தந்தார். அந்த தரிசனத்தில் விரிந்த மலரைப் போல, என் மகன் வாழ்வும் மலர்ந்துவிட்டது என்று எண்ணி எண்ணி மனம் மகிழ்ச்சியில் துள்ளியது. வானத்திலிருந்து வந்த மலர் விரிந்து மனதுக்கு மகிழ்ச்சியைத் தந்தது போல, என் மகனுக்கு வானராஜன் இயேசு கிறிஸ்து மீண்டும் உயிரைத் தந்திருக்கிறார்.

அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்துவிடுங்கள். (1 பேதுரு 5:7). நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்த உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். (பிலிப்பியர் 4:6) என்ற வேதவார்த்தைகள் எவ்வளவு வல்லமையானவை என்பதை செல்வம் தன் வாழ்வில் அனுபவப்பூர்வமாகத் தெரிந்து கொண்டார்.

திரு. செல்வம் அவர்களுடைய மகன் திரு. காவ்யகாந்த் தற்போது கள்ளக்குறிச்சி மாவட்டத்திலுள்ள கல்வராயன் மலையில் குடும்பமாக அருட்பணியாற்றி வருகிறார். அவருக்கு செல்வி என்ற மனைவியும், இரு பிள்ளைகளும் இருக்கிறார்கள். இவர்களுடைய ஊழியங்களுக்காக ஜெபியுங்கள். தற்போது, இவர்கள் செய்துவந்த அருட்பணியின் விளைவாக 30 பேர் ஆராதனையில் கலந்து கொள்கிறார்கள். இங்கு ஒரு ஆலயம் கட்டப்பட ஜெபியுங்கள்.

⇦⇦⇦



வேதாகமத்தின் பக்கங்களிலே "அருட்பணி" **11**

# திருப்பாடல்களில் (சங்கீதங்களில்) அருட்பணி.

Dr.N.J. ஞானையா



மாணவர்களான ஜானும், மாணிக்கமும் வருமுன்னரே ஆசிரியர் சாலமோன் அன்று வந்து அமர்ந்திருக்கிறார். யுடியூபில் "தேவ பிதா எந்தன் மேய்ப்பன் அல்லோ" என்ற பாட்டைக் கேட்டுக் கொண்டிருக்கிறார். ஜானும் மாணிக்கமும் வருகிறார்கள்.

**மாணிக்கமும், ஜானும்:** குட் ஈவினிங் சார். இன்று எங்களுக்கு முன்னமே வந்து வீட்டீர்கள். அருமையான–தெரிந்த கீர்த்தனைப் பாடலையும் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள்.

**சாலமோன்:** இது 23ஆம் சங்கீதம். திருவிவிலியம் அதை "திருப்பாடல்கள்" என அழைக்கிறது.

**ஜான்:** அது ஏன்?

**சாலமோன்:** நாம் வாசிக்கும் சங்கீதங்கள் மொழிபெயர்க்கப்பட்ட உரை நடை. ஆனால், அவை எபிரேய மொழியில் அருமையான பாடல்களாக எழுதப்பட்டவை–பாடப்பட்டவை. ஆகவே தான், அவை திருப்பாடல்கள் என்று அழைக்கப்படுகின்றன. இன்று நான் உங்களுடன் உரையாட விரும்பிய தலைப்பு "திருப்பாடல்களில் அருட்பணி" என்பது.

**மாணிக்கம்:** கேட்கவே நல்லாயிருக்கிறது. எல்லாச் சங்கீதங்களுமா அப்படி அருட்பணி பற்றிக் கூறுகின்றன?

**சாலமோன்:** அல்ல அல்ல. பல அருமையான துதிப்பாடல்கள். ஆண்டவரைப் போற்றி, புகழ்ந்து, வணங்கி ஆராதிக்கும் பாடல்கள். சில பாடல்கள் பாவமன்னிப்பு கேட்கும் பாடல்கள். சில பாடல்கள் நன்றி கூறும் பாடல்கள். ஆனால், ஆங்காங்கு யூதர்களுக்கு மட்டுமல்லாமல் "மற்ற மக்களும்" என வரும் பகுதிகள் அருட்பணிக்கருத்துக்களை உடையவை. திரு. ஜான் பீட்டர்ஸ் என்பவர் எழுதிய Biblical Theology of Missions என்ற நூலில் சங்கீதங்களில் மட்டும் 175 இடங்களில் அருட்பணி பற்றிய குறிப்பு உள்ளது.

**ஜான்:** சில எடுத்துக்காட்டுக்களைக் கூறுங்கள்

**சாலமோன்:** கண்டிப்பாக. சங்கீதம் 2: 8 இல் "ஜாதிகளை உமக்குச் சுதந்திரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன்" என்று வாசிக்கிறோம். மாணிக்கம், அப்பகுதியை நீ வைத்திருக்கும் திருவிவிலியத்தில் படி.

**மாணிக்கம்:** திருப்பாடல்கள் 2:8 " பிற நாடுகளை (இனங்களை) உமக்கு உரிமைச்சொத்தாக்குவேன். பூவுலகை அதன் கடையெல்லைவரை உமக்கு

உடைமையாக்குவேன்".

**சாலமோன்:** கடைசி வசனம் " அவரை அண்டிக்கொள்ளுகிறவர்கள் (அல்லது அடைக்கலம் புகுவோர்) பாக்கியவான்கள் என்று மிகத்தெளிவான ஓர் அருட்பணிச் செய்தியைக் கொடுக்கிறது.

**ஜான்:** யூத மக்களைக் கர்த்தர் தெரிந்துகொண்டாலும் மற்றவர்களைப்பற்றியும் அவர் கவலைப்படுகிறார். அதைத்தான் நீங்கள் எங்களுக்கு ஒவ்வொரு வாரமும் அழகாக வேதத்திலிருந்து கூறி வருகிறீர்கள். நேற்று நான் சங்கீதம் 33 வாசிக்கையில் சில வசனங்கள் அந்தக் கருத்தைக் கூறும் வகையில் என்னைக் கவர்ந்தன

**சாலமோன்:** அவை என்ன வசனங்கள் ?

**ஜான்:** சங்கீதம் 33:13-15 கர்த்தர் எல்லா மனுபுத்திரரையும் காண்கிறார். பூமியின் குடிகள் எல்லார்மேலும் கண்ணோக்கமாயிருக்கிறார். அவர்களுடைய இருதயங்களை உருவாக்கி, அவர்கள் செய்கைகளைக் கவனித்திருக்கிறார்.

**மாணிக்கம்**: நல்ல வசனங்கள் ஜான். அதைக்கேட்டவுடன் எனக்கு யோவான் 3:16 இல் நாம் வாசிக்கும் " தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" என்ற சொற்றொடர்களே நினைவில் வருகிறது.

**சாலமோன்:** மிக அருமையாக நீங்கள் இருவரும் "வேதாகமப் பக்கங்களில் அருட்பணி " என்ற தலைப்பின் கண்ணோட்டத்தில் வளர்ந்து வருகிறீர்கள்.

**மாணிக்கம்**: சார், இன்னும் சில சங்கீதங்களைக் கூறுங்கள்; நாங்கள் எங்கள் அறையிலோ அல்லது நூல் நிலையத்திலோ அவற்றை வாசித்துக் கொள்ளுகிறோம்.

**சாலமோன்:** ஆம், அது நல்ல யோசனை. சங்கீதம் 66, பூமியின் குடிகளை ஆண்டவரிடம் வரும்படி அழைக்கிறது. சங்கீதம் 67, யூதர்கள் தொடங்கி மற்றவர்களிடம் (அனைத்து மக்களிடமும்) செல்லுகிறது. சங்கீதங்கள் 87, 96,98,145 ஆகியவற்றையும் படித்துப்பாருங்கள். 117 ஆம் சங்கீதம்தான் மிகச்சிறிய – இரண்டே வசனங்களில் அடங்கியது. ஆனால் அதிலும் எல்லா மக்களும் வந்து ஆண்டவரைத் துதிக்கும் அழைப்பு உண்டு.

**ஜான்:** மிக நல்ல சங்கீதங்கள். வேறு என்ன எங்களுக்குக் கூற விரும்புகிறீர்கள்?

**சாலமோன்:** அருட்பணியில் நாம் வலியுறுத்தவேண்டிய மற்றொரு முக்கிய கருத்து வெளிப்படுத்தல் (Revelation) ஆகும். ஆண்டவர் தம்மை நமக்கு வெளிப்படுத்தாவிட்டால் நாம் அவரை அறிய முடியாது. மூன்று வகை வெளிப்படுத்தல்கள் உண்டு.

**மாணிக்கம்**: (ஆர்வமாக) அவை என்ன ?

**சாலமோன்:** முதல் வகை பொது வெளிப்பாடு (General Revelation); இரண்டாவது சிறப்பு வெளிப்பாடு (Special Revelation); மூன்றாவது தனிச்சிறப்பான வெளிப்பாடு (Unique Revelation). இவை மூன்றும் வருகின்ற சங்கீதம் 19 ஆகும்.

**ஜானும்**, **மாணிக்கமும்**: சற்று விளக்கிச் சொல்லுங்கள்

**சாலமோன்:** சங்கீதம் 19இல் முதலாவதாக வரும் இயற்கை பற்றிய குறிப்புக்கள்–வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகின்றன என்று தொடங்குவது–பொது வெளிப்பாடு– General Revelation; வசனங்கள் 7-11 வரை கர்த்தருடைய வசனங்கள் பற்றி வருவது–சிறப்பு வெளிப்பாடு – Special Revelation. இறுதியில் என் மீட்பரான கர்த்தாவே – என்று வரப்போகும்

இயேசுவைத் தீர்க்கத்தரிசனமாகக் கூறியது "தனிச்சிறப்பான அல்லது இணையற்ற வெளிப்பாடு" – Unique Revelation ஆகும்.

**ஜான்:** எம்மதமும் சம்மதம் என்றும் எல்லா ஆறுகளும் கடலில் விழுவது போல எல்லா மதங்களும் கடவுளிடம் சேர்க்கும் என்னும் கருத்துக்கள் பரவி வரும் காலத்தில் இந்த தனிச்சிறப்பு வெளிப்பாடு (Unique Revelation) என்னும் கருத்து அருட்பணிக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

**சாலமோன்:** இயேசுவின் வரலாறு ஓர் அப்பழுக்கற்ற – உலகத்தை மாற்ற வந்த வரலாறு. அவ்வரலாறு ஒரு தனிச்சிறப்பான வெளிப்பாடு. வேதம் முழுவதும் அதைத் தெள்ளத் தெளிவாக நாம் காண்கிறோம். தொடர்ந்து சங்கீதங்கள் என்னும் திருப்பாடல்களைப் படியுங்கள். அவை உங்களின் ஆவிக்குரிய வாழ்வையும் சீர்ப்படுத்தும். அருட்பணி பற்றிய அறிவையும் வளர்க்கும். அடுத்த வாரம் சந்திப்போம்.

**ஜானும், மாணிக்கமும்**: ரொம்ப நன்றி சார். அருமையான பாடங்கள்.

அடுத்த மாதமும் தொடருவோம்...

# ICGM வங்கி கணக்கு விபரங்கள்

## அருட்பணியாளர் உதவி மற்றும் பொதுவான காணிக்கைக்காக

Account Name : INDIA CHURCH GROWTH MISSION
Account Number: 10143136773
Bank : State Bank of India
Branch Name : Selaiyur, Chennai-73
IFSC Code : SBIN0007948

icgm1014@sbi

## ஆலயக் கட்டிட நிதிக்காக

Account Name : INDIA CHURCH GROWTH MISSION
Account Number: 11194454531
Bank : State Bank of India
Branch Name : Vinayaganagar, Madurai.
IFSC Code : SBIN0001479

## மருத்துவ நிதிக்காக

Account Name : ICGM MEDICAL EMERGENCY ENDOWMENT FUND
Account Number: 3196103692 1
Bank : State Bank of India
Branch Name : SELAIYUR, Chennai-73.
IFSC Code : SBIN0007948

வங்கி மூலமாக காணிக்கைகளை அனுப்புபவர்கள், அவ்விபரங்களை நமது அலுவலகத்திற்கு கடிதம் மூலமாகவோ, SMS மூலமாகவோ/ Whatsapp மூலமாகவோ 94421 50482 என்ற எண்ணுக்கு தகவல் அனுப்பும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். நன்றி. மேலேயுள்ள QR கோடை பயன்படுத்தியும் உங்களுடைய காணிக்கையைச் செலுத்தலாம்.




# ஞாயிறு-திங்கள்

திரு. சந்தோஷ் கணேசன்

இந்த மாதத்தில், இந்தியாவில் பெருவாரியான மக்கள், தீபாவளி பண்டிகையைக் கொண்டாடுவர். அச்சமயத்தில், பட்டாசுகள் வெடித்து மகிழ்வோடு இருப்பர். குறிப்பாக, இரவில் வானவெடிகளை வெடிக்கும்போது பார்ப்பதற்கு அழகாகவும், உள்ளம் மகிழ்வாகவும் இருக்கும். அதைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்பது போல் இருக்குமல்லவா!



ஆம்! வெளிச்சம் நமக்கு மட்டுமல்ல, அனைவருக்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கும் என்பது உண்மையே. ஆனால், நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்மை வெளிச்சத்தை பார்த்து மட்டுமே மகிழ்ந்துக் கொண்டிருங்கள் என்று சொல்லாமல், நீங்களே வெளிச்சமாக இருங்கள் என்று சொன்னார்.

**ஒளியில் வாழ அழைப்பு**:

‘ஒளி’ என்றால் ‘வெளிச்சம்’ என்பது அனைவரும் அறிந்தது. ஆனால், வேதாகமத்தில் ‘ஒளி’ என்பது பரிசுத்தத்தையும் ‘இருள்’ என்பது பாவத்தையும் குறிப்பதாக நிறைய இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ‘பாவம்’ என்றால் வேதாகமத்தின் மூல மொழியாகிய எபிரேயம் மற்றும் கிரேக்கத்தில் ‘இலக்கைத் தவற விடுதல்’ என்று அர்த்தம், அதாவது கடவுள் நமக்கு வைத்திருக்கும் இலக்கு அல்லது நோக்கத்தினை விட்டு விலகி வேறு திசையில் பயணிப்பது.

‘பரிசுத்த வாழ்க்கை’ என்றால் கடவுளின் நோக்கத்திற்கு நாம் மறுபடியும் திரும்பி, அவர் என்னவிதமான குணங்களோடு இருக்கிறாரோ, அதேபோல் வாழ்வது அல்லது வாழ முயற்சிப்பது. இந்த இருள் என்னும் பாவமானது நம்மைப் படைத்த கடவுளிடத்தில் உறவாட விடாமல் தடுக்கிறது.

ஆண்டவருக்குப் பிரியமாக ‘பரிசுத்தம்’ என்னும் ஒளியில் வாழ வேண்டிய நாம், பல நேரங்களில் அவரை ஒதுக்கி வைத்துவிட்டு, நமக்கு பிடித்த மாதிரியான வாழ்க்கையை வாழ வேண்டும் என்று விரும்புகிறோம். அதனால், பல நேரங்களில் ஜெபம் செய்யவும், வேதாகமத்தை தியானிக்கவும், மனம்

வருவதில்லை. நாமே பாவமென்னும் இருளில் சிக்கிக் கிடப்பதால், ஒளியில் வாழவும் முடியவில்லை; மற்றவர்களுக்கு ஒளியாக இருக்கவும் முடிவதில்லை, அதனால், மற்றவர்களுக்கு இயேசுவை அறிவிப்பதில்லை; நமக்கெதுக்கு வம்பு என்று விட்டுவிடுகிறோம்.

ஒரு கிராமத்தின் அனைத்து வீடுகளும் இருட்டாக இருக்கும்போது, ஒரு வீடு மட்டும் விளக்குகளைப் போட்டு பளிச்சென்று வெளிச்சமாக இருந்தால், எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். இதுபோல்தான், பாவம் என்னும் இருளில் மூழ்கியிருக்கும் இந்த உலகத்தில், பரிசுத்தம் என்னும் ஒளியாக வாழும் வாலிபர்களை ஆண்டவர் தேடுகிறார். இன்னும் எவ்வளவு நாள் இருளிலேயே இருக்கப்போகிறீர்கள்?

1 பேதுரு 2:9 இவ்வாறு சொல்கிறது "நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்". அதனால் இயேசு உன்னையும், அப்படியே விட்டுவிட விரும்பவில்லை. உலகம் தரும் இன்பத்திலிருந்தும், பாவத்திலிருந்தும் மனதை அவர் பக்கமாகத் திருப்பி, அவருக்காக வெளிச்சத்தில் வாழ, உன்னை அழைக்கிறார்.

**ஒளியைப் பிரதிபலிக்க அழைப்பு:**

நான் உலகத்திற்கு ஒளியாய் இருக்கிறேன் (யோவான் 8:12) என்று சொன்ன இயேசு கிறிஸ்து, நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாய் இருக்கிறீர்கள் என்றும் சொன்னார் (மத்தேயு 5:14). இயேசு கிறிஸ்து ஞாயிற்றின் (சூரியன்) ஒளியைப் போன்றவர், நாம் திங்களின் (சந்திரன்) வெளிச்சத்தை போன்றவர்கள். சுயமாக ஒளி கொடுக்கும் தன்மையில்லாத திங்கள், ஞாயிற்றிடமிருந்து வரும் ஒளியை பிரதிபலிக்கிறது.

அப்படியென்றால், இயேசு என்னும் ஒளியை நாம் உள்வாங்கி அதை பிரதிபலிக்க செய்ய வேண்டுமே தவிர, நான் யார் என்பதையும்; எனக்கு என்ன திறமை இருக்கிறது என்பதையும்; நான் எவ்வளவு பெரிய ஆள் என்பதையும்; மற்றவர்களுக்கு காட்டுவது அல்ல.

மத்தேயு 5:16 இவ்வாறு சொல்கிறது "...மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது".

உங்களது வெளிச்சத்தால் பயன்பெற பல இளைஞர்களின் ஆத்துமாக்கள் காத்துக் கொண்டிருக்கின்றன.

ஆண்டவரே, நான் ஒளியில் வாழ்ந்து, பிறரைப் பிரகாசிக்க வைக்கும் ஒளியாக வாழ என்னை எடுத்துப் பயன்படுத்தும் என்று நம்மை அர்ப்பணிக்கலாமா!

**இயேசு கிறிஸ்து என்ற அந்த மெய்யான ஒளியைப் பிரதிபலிப்பவர்களாக நாம் இருக்க வேண்டும் என்று ஆண்டவர் விரும்புகிறார்.**

## 2025 செப்டம்பர் மாத வேத வினா - விடை போட்டியில் சரியான விடைகள் எழுதியவர்களைப் பாராட்டுகிறோம்.

**மதுரை**
ஆசீர்வாதம்
கலா செல்வகுமாரி
மனோகராஜ்
ஞானசிரோன்மணி
ஷீலா சுரேஷ்
பீலோ சாமுவேல்
ஜான்சி காமராஜ்
வினோதினி
ஹேமலதா வில்சன்
ராஜ்குமார்
சம்பு ஜெயச்சந்திரன்
ராணி ஸ்டான்லி பால்
அருள்மொழி ஜான்சன்
குளோரி ஸ்டீபன்
ஜெர்லி இம்மானுவேல்
தெல்மா ஸ்டான்லி
ஆண்ட்ரூஸ்
ரத்னாபாய் ஜேசுதாசன்
சுசீலா ஆபிரகாம்
பங்கஜம் மார்த்தாண்டம்
ஜெமி ஸ்டீபன்
குளோரி மல்லிகா
ரஜினி பியூலா ஷோபிகா

**கன்னியாகுமரி**
ஹெப்சிபா நசல்
பியூலா ஜான்சன்
ரோஹினி ஜேசன்
மோகன் சி கமலம்
செல்வராஜ்
பியூலா பால்ராஜ்
கிறிஸ்டாபெல் ஜெயந்தி
லலிதா ஜாஸ்பர்
பமீலா எட்வின்
பிரேமா ஜெரால்டு
லில்லி புஷ்பம்
பிராகரன்ஸ் தங்கராஜ்
லீலா அய்யாக்கண்
ரெத்னா ராஜ்குமார்
தேவசகாயம்

**திருநெல்வேலி**
ஜான்சி சந்தியா
நூர்ஜி
வசந்தா பாலசேகரன்
சந்திர போஸ்
ஜெனிபர் சில்வியா
ரூபி செல்வராணி
அன்பு சுதந்திரம்
கஸ்தூரி எலியாஸ்
லில்லி பொன்னுத்தாய் செல்வராஜ்
ஹெலன் ரோஸ் ஜீவன்தாஸ்
லதா
ஹெலன் ஸ்வீட்
வயலட் கிறிஸ்டோபர்
ஜாஸ்மின் சாம்சன்
பத்மா ராஜையா
சுந்தரி ஸ்டீபன்
சாந்தி ராஜன்
ரூத் ஜெயராணி அன்புராஜ்
ரூத் கமலம்
செல்வி பொன்னரசி
ஞானசுந்தரி நாகராஜன்
ரெஜினா சாலமோன்
பிரின்ஸ்
பாக்கியம்
சந்திரலீலா திரவியம்
அன்பு டேனியல்
கிரேஸ் அகஸ்டின்
ரெஜூலா செல்வின்
ஜேன் தர்மராஜ்
ஜெயசிங்
சந்திரா தாமஸ்
ஜோதிமாலா மனுவேல்
வில்லியம் பிரெடெரிக்
ஞானதுரை
ரோஸலின் ஜோசப்
பிரின்சஸ் சுரேந்திரநாத்
விஜயவல்லி ஜான்
சாமுவேல் டேவிட்

**தூத்துக்குடி**
லீலா டேவிட்சன்
ரூபவல்யா
அன்னத்தாய் ஆல்பர்ட்
அசோக்குமார் பிரின்ஸ்
சாந்தகுமாரி
ஞானமணி ஹெப்சிபா
ஸ்டான்லி ராஜாமணி
தேவமணி ஆபிரகாம்
பாக்கியராஜ்
ஜோதி ஏசுதாசன்
ஜோதிமணி வில்சன்
ஷேபா கோயில்பிச்சை
ரேச்சல் தவமணி
சக்குபாய்
ஆலீஸ் குணசீலி
அன்பு
கிருபாசனம் ரெமீஜியஸ்
செல்லமணி ஆல்பர்ட்
ரெத்னாவதி முத்துராஜ்
குளோரி
சுதா டேவிட்
ஹெலன் திலக்
மனோகரம் ஜான்சன்
ஜலஜா மணிராஜ்
ஆதிசரோன்மணி ஞானதீபம்
சேசம்மாள் தேவசகாயம்
சுகிர்தவல்லி பொன்னுசாமி
தியாகராஜன்
பாக்கியமணி
புஷ்பராணி ஜேம்ஸ்

**சென்னை**
சாந்தி டென்னிசன்
கனகா வேணுகோபால்
ஜெயமேரி சந்திரசேகரன்
கிரேஸ் தங்கதுரை
சைமன் கலைச்சந்திரன்
செலின்ராணி டேவிட்
துரைராஜ்
மோகன் முத்தையா
மில்காள் சாம்
ஷீலா சேகர்
கரோலின் ராஜகுமாரி
டோரிஸ் பிலோமினா
ஜெயச்சந்திரன்
அன்னாள் ஜான்
யூனிஸ் ரிச்சர்ட்
டேவிட் ஜெயகுமார்

**செங்கல்பட்டு**
கருணாகரன் ஆனந்தி

**திருச்சி**
திலீப்குமார்
ஜெபசீலி ஜெயக்கொடி
ஒய்ஸ்லைட் துரைராஜ்
லில்லியன் ஜோசப்
சூசன்னா
ராணி
ஜெபமணி டேவிட்

**கோயம்புத்தூர்**
சின்னக்கண்ணு தனபால்
வசந்த மல்லிகா
ஆனந்தன்
ஜான்சி

**தேனி**
பொன்ராணி அன்புநாதன்
ஜாய்ஸ் தேவராஜ்
எலிசபெத் பால்ராஜ்
மாலா வில்சன்
நேசமணி சாமுவேல்
சுசீலா

**புதுக்கோட்டை**
சாந்தி வில்லியம்

**தஞ்சாவூர்**
பிரமீளா செல்வம்
குணசீலி ஸ்டீபன்
மல்லிகா ஞானபாய்
சாந்தி குணசேகரன்
ரோஸ்லின் செல்வராணி
சிந்தி ஜாஸ்வா
ஜோஸபின் செல்லத்தாய்

**சிவகெங்கை**
லலிதா பெவின்சன்
அன்பு கமலம்
பாலின் மார்டின்

**ஈரோடு**
இமாகுலேட் விக்டர் பாபு
பென்னி
ஜெயகுமாரி

**பெங்களூரு**
டாரத்தி சாந்தகுமாரி
பால்ராஜ்
சில்வியா ராஜகுமாரி
சூர்யா ரிச்சர்ட்சன்
லதா கிரேஸ்

**நீலகிரி**
ஜாய்ஸ் ஸ்டீபன்ராஜ்

**சேலம்**
இவாஞ்சலின் ஜோன்ஸ்
ரோலண்ட் அருள்ராஜ்
பழனியம்மாள் சுவாமிநாதன்

**பாண்டிச்சேரி**
பியூலா ஜெசுராஜன்

**திருப்பூர்**
கனகசத்தியவதி
தேவி ராஜாசிங்

**விருதுநகர்**
லீலாவதி பால்சிங்
பொன்னுத்தாய் ராஜேந்திரன்
பிளாரன்ஸ் ராஜமோகன்

**வேலூர்**
மெர்ஸி புளோரா
ஸ்ரீதர் மோசஸ்

**கள்ளக்குறிச்சி**
வசந்தா செல்வராஜ்

**திண்டுக்கல்**
பால் சின்னத்தம்பி
அகஸ்டி ராபர்ட்
குளோரி மனோகர்
அனிதா மெர்லின்

**பெரம்பலூர்**
சுகுந்தகுமாரி

**மும்பை**
லீலா ஏர்னஸ்ட்

**இராமநாதபுரம்**
ஸ்டெல்லா வசந்தகுமாரி

# வேத வினாக்கள் — அக்டோபர் - 2025

**(அப்போஸ்தலர் நடபடிகள்: 8 முதல் 14 அதிகாரங்கள் வரை)**

**பொருத்துக**

1. பணம் – அத்தாலியா
2. கண்கள் – கொர்நேலியு
3. பெர்கே – சப்பாணி
4. லிஸ்திரா – நாசமாய்
5. செசரியா – மீன் செதிள்கள்

**கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. தேவனுடைய ..... இவன்தான் என்று எண்ணி ..... ..... யாவரும் அவனுக்கு ..... வந்தார்கள்.
2. ..... என்றும் பவுல் ..... நடத்தினவனானபடியினால் அவனை ..... என்றும் சொன்னார்கள்.
3. கொர்நேலியு ..... தன் வீட்டாரனைவரோடும் ..... பயந்தவனுமாயிருந்து ஜனங்களுக்கு ..... செய்தான்.
4. ..... ..... ஏற்றுக் கொண்டார்களென்று யூதேயாவிலிருக்கிற ..... ..... கேள்விப்பட்டார்கள்.
5. அக்காலத்திலே ..... ..... பேரிலும் ..... பேரிலும் மிகவும் .....யிருந்தான்.

**விடை எழுதுக**

1. சவுல் தரையில் விழுந்தபோது கேட்ட சத்தம் என்ன?
2. நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய் செய்து கொண்டு வந்தவன் யார்?
3. பேதுரு தரிசனத்தில் ஒருவிதமான கூட்டில் எவை இருப்பதாக கண்டான்?
4. கொர்நேலியு எப்படிப்பட்ட சாட்சி பெற்றவன்?
5. பர்னபா எப்படிப்பட்டவன்?

**தொகுப்பு:** Mrs. **மெர்ஸி கிறிஸ்டோபர்,** *சென்னை.*

- விடைகளுடன், வேத ஆதாரங்களையும் எழுதுங்கள்.
- விடைகளை அஞ்சல் அட்டையில் எழுதக்கூடாது.
- வினா எண்ணைக் குறிப்பிட்டு, பதில்களை மட்டும் எழுதுங்கள்.
- வளரும் விண்ணரசு இதழின் சந்தா எண் மற்றும் அலைபேசி எண்ணுடன், உங்கள் **முழு முகவரியையும்** எழுதுங்கள்.
- சரியான விடை எழுதியவர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**வேதவினா–விடை,**
**வளரும் விண்ணரசு,**
**58/1, முத்தாலம்மன் கோவில் தெரு,**
**சேலையூர், சென்னை – 600 073.**
**9003916480**

**உங்களது விடைகள் எங்களுக்கு வந்துசேர கடைசி நாள் இம்மாதம் 20ஆம் தேதி**

**செப்டம்பர் மாத வேதவினா–விடை போட்டியில் பரிசு பெற்றவர்களைப் பாராட்டி வாழ்த்துகிறோம்!**



1. திருமதி. **கஸ்தூரி எலியாஸ்** – **திருநெல்வேலி**
2. திருமதி. **ரூபவல்யா** – **தூத்துக்குடி**
3. திரு. **ரோலண்ட் அருள்ராஜ்** – **சேலம்**

# நடப்புச் செய்திகள்

**சென்னை**: முறிந்த எலும்புகளை மூன்றே நிமிடத்தில் ஒட்ட வைக்கும் பசையை உருவாக்கி உள்ளதாக சீனாவை சேர்ந்த விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இன்றைய நவீன மருத்துவ துறையில் ஒருவருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டால் அதன் தன்மையை பொறுத்து மருத்துவர்கள் சிகிச்சை வழங்குவது உண்டு. சில நேரங்களில் அறுவை சிகிச்சை மூலம் முறிந்த எலும்புகளை சேர்க்க/கூட்ட உலோகத்தை பயன்படுத்துவது உண்டு. எலும்பு கூடிய பிறகு பொருத்தப்பட்ட உலோகத்தை மீண்டும் அறுவை சிகிச்சை மூலம் அகற்றுவது உண்டு. சிலருக்கு அந்த உலோகம் உடலில் உள்ள எலும்போடு அப்படியே இருப்பதும் உண்டு. இந்த சூழலில் இதற்கு மாற்றாக எலும்புகளை ஒட்ட வைக்கும் பசைகளை சீனாவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் உருவாக்கி உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. சீனாவின் கிழக்கு பகுதியில் உள்ள ஜெஜியாங் மாகாணத்தை சேர்ந்த மருத்துவர்கள் இதை உருவாக்கி உள்ளனர். சிப்பிகள் நீருக்கடியில் சில இடங்களில் உறுதியாக ஒட்டிக்கொண்டிருப்பதை கவனித்த பிறகு இந்த எலும்பு பசையை உருவாக்கும் யோசனையை பெற்றதாக எலும்பியல் அறுவை சிகிச்சை மருத்துவ நிபுணர் லின் சியான்ஃபெங் தெரிவித்துள்ளார். இந்த பசையை கொண்டு உடைந்த எலும்புகளை மூன்று நிமிடங்களில் ஒட்ட முடியும் என லின் கூறியுள்ளார். எலும்புகள் குணமடைந்ததும் இந்த பசை தானாகவே கரைந்து விடும் என அவர் கூறியுள்ளார். 'போன்-02' என அறியப்படும் இந்த பசையின் செயல்பாடு மற்றும் பாதுகாப்பு தன்மை உள்ளிட்டவை ஆய்வு கூடத்தில் சோதனை நடத்தியதன் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. சுமார் 150 பேருக்கு இதைக் கொண்டு பரிசோதனையை மருத்துவர்கள் மேற்கொண்டுள்ளனர். ஆனால், எலும்புகளை ஒட்ட வைக்கும் பசை என 'போன்-02' அறிவிக்கப்பட்டுள்ளது. இது உலக அளவில் அறிமுகமாகும் போது எலும்பு முறிவு சிகிச்சையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் மெட்டல் இம்பிளான்ட் செய்ய வேண்டிய தேவை இருக்காது.

**சென்னை**: தமிழகத்தில் புதிய டிராக்டர் வாங்குவோர் ரூ.42 ஆயிரம் வரை சேமிக்கலாம் எனவும் ரூ.40 ஆயிரத்துக்கு டிவி வாங்குவோர் ரூ.4 ஆயிரம் வரை சேமிக்கலாம் என்றும் ஜிஎஸ்டி 2.0 சீர்த்திருத்தம் தெரிவிக்கிறது. இந்தியா முழுவதும் ஜிஎஸ்டி சீர்திருத்தம் என்பது செப்டம்பர் 22ஆம் தேதி முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது. இதையொட்டி தமிழகத்தின் வளர்ச்சிக்கான ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள் குறித்த ஜிஎஸ்டி 2.0 புத்தகத்தை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், சென்னையில் வெளியிட்டார். அப்போது அவர் கூறும்போது, நீண்ட நாள் கோரிக்கையான ஜிஎஸ்டி குறைப்பு என்பது ஒவ்வொரு குடிமகனின் வெற்றியாகும். தீபாவளிக்கு முன்பு இதை அமல்படுத்த வேண்டும் என பிரதமர் விரும்பினார். ஆனால் நவராத்திரிக்கு முன்பே வரிகுறைப்பு அமலாகும் என்றார். ஜிஎஸ்டி 2.0 புத்தகத்தில் கூறியிருப்பதாவது: ஜிஎஸ்டி வரிகுறைப்பில் டிராக்டர்களுக்கான ஜிஎஸ்டி என்பது 12 சதவீதத்தில் இருந்து 5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், ரூ.6 லட்சம் மதிப்புள்ள புதிய டிராக்டருக்கு ரூ.42 ஆயிரம் வரை சேமிக்க முடியும். டிராக்டர் டயர்கள் மற்றும் உதிரி பாகங்களுக்கான ஜிஎஸ்டி 18 சதவீதத்தில் இருந்து 5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. இதனால் ரூ.50 ஆயிரம் மதிப்புள்ள டிராக்டர் டயர்களின் விலையில் ரூ.6,500 குறைந்துள்ளது. காஞ்சிபுரம் பட்டு, மதுரை சுங்குடி துணிகளுக்கு 12 சதவீதத்தில் இருந்து 5 சதவீதமாக ஜிஎஸ்டி குறைக்கப்பட்டுள்ளது. ரூ.1 லட்சம் மதிப்பிலான இருசக்கர வாகனங்களுக்கு ரூ.10 ஆயிரம் வரையும், ரூ.6 லட்சம் மதிப்பிலான சிறிய ரக கார்களுக்கு ரூ.60 ஆயிரம் வரையும், ரூ.3 லட்சம் மதிப்பிலான ஆட்டோக்களுக்கு ரூ.30 ஆயிரம் வரை ஜிஎஸ்டி குறைக்கப்பட்டுள்ளது. மேலும் பரோட்டா, ரொட்டி, சப்பாத்தி போன்ற உணவு பொருட்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளதால் ரூ.5 முதல் ரூ.10 வரை செலவு குறையும் என்றும் எதிர்பார்க்கலாம். தமிழக பள்ளிகளில் பயின்று வரும் 1.5 கோடி குழந்தைகள் பயனடையும் வகையில் குறிப்பேடுகள், ரப்பர், பென்சில், கிரெயான்ஸ் போன்றவற்றில் ரூ.850 வரை பெற்றோரால் இனி சேமிக்க முடியும். அதேபோல் ரூ.1,000 மதிப்பிலான மருந்துகளுக்கு ரூ.100 வரை ஜிஎஸ்டி குறைக்கப்பட்டுளளது. குறிப்பாக புற்றுநோய்களுக்கான மருந்துகளுக்கு ரூ.1200 வரை விலை குறைகிறது. கட்டுமானத் தொழில்களில் ரூ.50 ஆயிரம் மதிப்பிலான சிமெண்ட் கொள்முதலில் ரூ.5 ஆயிரம் வரை சேமிக்கலாம். தமிழகத்தில் குறிப்பாக ரூ.40 ஆயிரம் மதிப்பிலான தொலைக்காட்சி பெட்டிகளுக்கு ரூ.4 ஆயிரம் வரையும், ரூ.35 ஆயிரம் மதிப்பிலான ஏசி-களுக்கு ரூ.3,500 வரையும் ரூ.60 ஆயிரம் மதிப்பிலான ஹீட்டருக்கு ரூ.7 ஆயிரம் வரையிலும் விலை குறையும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நன்றி: தி இந்து தமிழ் திசை (16/09/2025)

# அருட்பணியாளர்களின் மருத்துவ உதவிக்காக...

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களுக்கு,

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துகள்.



இறைமகன் இயேசு கிறிஸ்து அருளும் மீட்பின் செய்தியை இந்தியாவில் நற்செய்தி சென்றடையாத இனக்குழுக்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு அறிவித்து, சீடர்களை உருவாக்கி, சுயசார்புள்ள திருச்சபைகளை உருவாக்கும் உன்னத பணியில் நமது அருட்பணியாளர்கள் ஈடுபட்டு வருகிறார்கள்.

பல்வேறு கால சூழ்நிலைகளில் அருட்பணியாற்றுவதால், அருட்பணியாளர்களில் சிலர் நீண்டகாலம் சிகிச்சை பெறவேண்டியுள்ளது; பலர், தொடர்ந்து மருந்து எடுத்துக் கொள்ளக்கூடிய சுகவீனங்களால் பாதிப்படைகின்றனர். அருட்பணியாளர்களுக்கு எதிர்பாராத அறுவை சிகிச்சை தேவையும் ஏற்படுகிறது.

திடீரென அருட்பணியாளர்கள் சுகவீனமடையும்போது, அதற்கான பணத்தேவையை உடனே சந்திப்பது நம் அருட்பணி இயக்கத்திற்கு ஒரு பெரிய சவாலாக இருந்து வருகிறது. எதிர்பாராமல் வரும் மருத்துவ செலவினங்களுக்கு என அருட்பணியின் ஆதரவாளர்களாகிய உங்கள் உதவியை நாடுகிறோம்.

இந்தத் தேவைகளைச் சந்திக்க, உங்களது காணிக்கைகள் பெரிய உதவியாயிருக்கும். உங்களது தொடர்ந்த ஆதரவைத் தர அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

உங்களது காணிக்கைகளை உங்கள் அருகில் இருக்கும் நமது தரிசனம் பரப்பும் ஊழியரிடமோ அல்லது கீழே கொடுக்கப்பட்டுள்ள வங்கிக் கணக்கிற்கோ அல்லது **QR Code**ஐ பயன்படுத்தியோ நீங்கள் அனுப்பும் போது, விபரங்களை இந்த மொபைல் **(9445924440)** எண்ணிற்கு **WhatsApp** அல்லது **SMS** மூலம் அலுவலகத்திற்குத் தெரியப்படுத்துங்கள். இரசீது தயாரிக்கவும், அதை உங்களுக்கு உடனே அனுப்பவும் உதவியாயிருக்கும்.

தேவகிருபை உங்களோடிருப்பதாக.

கிறிஸ்துவின் சீடராக்கும் பணியில்.

அருள்திரு.அ. லெஸ்லி நாகராஜன்,

பொதுச்சேவகர்.

**Account Name : ICGM MEDICAL EMERGENCY ENDOWMENT FUND**
**Account Number: 3 1 9 6 1 0 3 6 9 2 1**
**Bank : State Bank of India**
**Branch Name : SELAIYUR, Chennai-73.**
**IFSC Code : S B I N 0 0 0 7 9 4 8**

icgm1014@sbi

ICGM

**Registered with RNI Under No:TNTAM/2000/01585**
Postal Registration No: TN/MA/42/2024-2026 WPP No: TN/WPP-20/SR/2024-2026
Posted at BPC Madurai - 625 001.
Date of publishing: 28th September 2025 Date of posting - 28,29 & 30th September 2025.

Printed by Mr.S.Gunasekaran and Published by Mr.D. Thirugnanam on behalf of Irai Arasu Trust and printed at Sharon Print System, No:51/71, Ahimsapuram First Street, Near Saraswathi Theatre, Sellur, Madurai-625002 and Published at Nagamalai Pudur, Palkalai Nagar, Madurai-625021, Editor Mr.G. Ponnuraj.

**பொதுச்சேவகரிடமிருந்து... தொடர்ச்சி...**

ஆண்டுவிழாவில் கலந்து கொண்டேன். செப்டம்பர் 20 முதல் 22ஆம் தேதி வரை கன்னியாகுமரியிலுள்ள சிஎஸ்ஐ தியான மற்றும் வாலிபர் மையத்தில், தரிசனம் பரப்புவோருக்கான குடும்பக்கூடுகை நடைபெற்றது. செப்டம்பர் 27ஆம் தேதியன்று ஆந்திர மாநிலத்தில் அருட்பணியாற்றும் அருட்பணியாளர்களுக்கென சிறப்புக்கூட்டம் நடைபெற்றது.

சத்தீஷ்கர், ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களில் கட்டப்பட்டு வரும் ஆலயக்கட்டுமானப்பணிகள் விரைவில் முடிவடைய ஜெபித்துக் கொள்ளுங்கள். இம்மாதத்தில் குருணைக்கல்பட்டி மறு ஆலயக் கட்டுமானப்பணி தொடங்கப்படவும், அதன் தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். அலுவலக ஊழியர் திரு. சைமன் பிரவீன் லிவிங்ஸ்டன் சேலத்தில் மல்டிமீடியாவில் சிறப்புப் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கிறார். சிறப்பான பயிற்சியைப் பெற்றுத் திரும்ப ஜெபித்துக் கொள்ளுங்கள்.

தேவகிருபை உங்களோடிருப்பதாக!

கிறிஸ்துவின் சீடராக்கும் பணியில்,
அருள்திரு.அ. லெஸ்லி நாகராஜன்,
பொதுச்சேவகர்.

**If undelivered, please return to:**

Valarum Vinnarasu, No.58/1. Muthalamman Koil Street,
Selaiyur, Chennai - 600 073. Tamilnadu.
Cell : 94459 24440

icgm1014@sbi

ICGM

**To:**